16/03/2005 க.பொ.த (உயர்தரம்) (நேர அட்டவணை)

Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி – 18 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 20 (31.03.2005) வியாழக்கிழமை இதழ்:183

## ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை ஜனாதிபதியாக நியமித்து

# 'பொம்மை' ஆட்சியை நடத்தும்

# சந்திரிகாவின் திட்டம் தோல்வி!







(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை நிறுத்தி - வெற்றியீட்டிய பின்னர், அவரது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி பிரதமர் பதவியில் தான் அமர்ந்து ஆட்சியைத் தொடர்வதற்கு - ஜனாதிபதி சந்திரிகா போட்டிருந்த திட்டம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கடும் எதிர்ப்பால் தவிடு பொடியாகியது.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நெருங்கிய வட்டாரங்கள் வெளியிட்ட இந்தத் தகவல் குறித்து மேலும் தெரிய வருவதாவது -

ஜனாதிபதி சந்திரிகா தனது (12 ஆம் பக்கம் பார்க்க)

## சத்திரசிகிச்சை வகுப்புக்கள் திங்கட்கிழமை ஆரம்பம்!

### பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் அனைவரையும் இன்று விரிவுரைகளுக்கு சமுகம் அளிக்குமாறும், இறுதி வருட மருத்துவபீட மாணவர்களுக்கான சத்திரசிகிச்சை வகுப்புக்கள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நிபுணர்குழு, மருத்துவபீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர், பேரவையால் அமைக்கப்பட்ட விசேட குழு ஆகியன உள்ளடக்கிய விசேட சந்திப்பொன்று நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் நரம்பியல் நிபுணர் வி. குணானந்தனை மூன்று மாத காலத்தினுள் பல்கலைக்கழகம் ஒன்றில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. கூட்டத் தொடரில் முறைப்பாடு!

(ஜெனீவா)

இலங்கையில் தமிழர் தாயகப் பகுதிகளில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் மனித உரிமை மீறல்கள் குறித்து - ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவின் 61 ஆவது கூட்டத் தொடர் தலைவரிடம் - தமிழர் மனித உரிமைகள் மையத்தின் பொதுச்செயலாளர் கிருபாகரன் முறைப்பாடு ஒன்றைக் கையளித்துள்ளார்.

பிரான்ஸில் தலைமையகத்தைக் கொண்டியங்கிவரும் தமிழர் மனித உரிமைகள் மையம், ஐ.நா. மனித உரிமைக் குழுவிடம் அளித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கைத் தீவில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டு, மூன்று வருடங்களாகியும் இன்னும் சுமுகமான நிலை உருவாகவில்லை.

போர்நிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்டது போல் போரால் இடம் பெயர்ந்த மக்கள் இன்னும் தங்கள் வசிப்பிடங்களுக்குத் திரும்பவில்லை. இராணுவம் - தொடர்ந்து மக்களைத் துன்புறுத்துவதுடன், பாதுகாப்பு வலயம் என்று கூறி தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் மக்கள் குடியிருப்புக்கள் அடங்கிய பல பெரிய பிரதேசங்களை இராணுவமயப்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் போர்க் காலத்தில் இருந்த இராணுவத்தினரை விட பல மடங்கு இராணுவத்தினர் தற் (12 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோர் இருவரையும்

விண்ணாணம் விநாசியர்

## பின்லாந்து அரச அதிகாரிகளுடன்

மற்போனோர் இருவரையும்

# படையினர் கைது செய்ததை ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் 1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமற்போனோர் தொடர்பான இரண்டு வழக்குகள் குறித்த விசாரணைகள் நீதிமன்றில் நேற்று நடைபெற்றன.

லோகேஸ்வரன் சேரன் என்பவர் காணாமற்போனமை தொடர்பாக அவரது தந்தையார் சாட்சியமளித்தார். இந்த வழக்கில் பிரதிவாதியாக லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ, கப்டன் லலித் குமார, முன்னாள் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல, சட்டமா அதிபர் ஆகி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பியின் வாகனம்மீது சூடு; பொலிஸார் ஒருவர் படுகாயம்!

## மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் ஆறுமுகத்தான் குடியிருப்பில் ஈ.பி.டி.பியினரின் வாகனம் மீது இனந் தெரியாதோர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் காயமடைந்தார்.

மட்டக்களப்பு ஈ.பி.டி.பி அலுவலகத்திலிருந்து செங்கலடியிலுள்ள அலுவலகத்துக்கு வாகனம் ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்த செங்கலடி அலுவலக ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் ரவி எனப்படும் தர்மலிங்கம் என்பவரை இலக்குவைத்தே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



பதவி ஆசை ஆரைத்தான் விட்டு வைச்சுது பாருங்கோ.... !


# சுனாமி எச்சரிக்கையால் பத்துப் பேர் உயிரிழப்பு!

சுனாமி அச்சுறுத்தல் குறித்து கடந்த திங்கட்கிழமை அரசு விடுத்த முன்னெச்சரிக்கையைத் தொடர்ந்து அதிர்ச்சி மற்றும் விபத்துக்களில் 10 பேர் உயிரிழந்தனர்.

அட்டாளைச்சேனை, பெரிய நீலாவணை, சம்மாந்துறை, பாணந்துறை, கொஸ்கொடை, ஹெந்தல, பாணம்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பின்லாந்து அரச அதிகாரிகளுடன் அரசியல் விவகாரக்குழு சந்திப்பு!



பின்லாந்தின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் ஆசியாவுக்கான தூதர் மிக்கோ பைகலா தலைமையிலான குழுவை, தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான தமிழீழ அரசியல் விவகாரக் குழுவினர் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பின்போது - தூதுவர் மிக்கோ, சுனாமிக்குப் பின்னரான புனரமைப்புப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதை பின்லாந்து ஊக்குவிப்பதாகவும், இனியும் தாமதிக்காமல் பொதுக்கட்டமைப்பை உடனே செயற்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண் டார்.

அமைதிப் பேச்சுக்களின் தற்போதையை நிலைமை, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் நடைமுறைச் சூழல் மற்றும் டிசெம்பர் 26 ஆம் திக திக்கு முன்னர் போரி னால் சீரழிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதியானது சுனாமியால் மேலும் சிதை வடைந்திருப்பதால் - அதனை புனரமைப்பதற் கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குதல் ஆகியவை தொடர்பாக பின்லாந்து வெளியுறவுக் குழுவிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் விளக்கிக் கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது பின்லாந்தின் சர்வதேச விவகாரங்களுக்கான துறையின் இயக்குநர் கரி கர்ன்கோ, மனிதாபிமான உதவிகளுக்கான ஆலோசகர் திமோ கர்மாக்லியோ மற்றும் பின்லாந்து செஞ்சிலுவைச் சங்க திட்ட அலுவலர் அன்னா ஜான்பெர்க் ஆகியோர் உடனிருந்தனர்.



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAiR
Your friend in the skies...

# பதிவாளரை மீள நியமிக்க முற்பட்டால் எதிர்த்துப் போராட்டம் நடத்துவோம்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை

***ஊழல் குற்றச்சாட்டின் பேரில் இடைநிறுத்தப்பட்ட பதிவாளரை மீண்டும் நியமனம் செய்வதற்கு நிர்வாகம் முற்படுமானல் அதனை எதிர்த்து பல்கலைக்கழக மாணவர்களும் ஊழியர்களும் இணைந்து போராட்டத்தல் குதிப்போம் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.***

***நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாணவர் ஒன்றியத்தின் பொதுக் கூட்டத்திலே இந்த முடிவு எடுக்கப்ட்டதாக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -***

பல்கலைக்கழகமானது மாணவர்களது சொத்து. எமது கல்விக்காகவே அனைத்து நிர்வாக அலகுகளும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. எமக்காக உருவாக்கப்பட்ட நிர்வாக அலகுகள் அடிக்கடி போராட்டங்களை முன்னெடுப்பதால் பாதிக்கப்படுவது மாணவர்களும் அவர்களது கல்விச் செயற்பாடுகளும் தான்.

உண்மையில் எந்த தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கும் மாணவர்கள் எதிரானவர்களல்ல. என்ன பிரச்சினை என்றாலும் மாணவர் ஒன்றியத்துடன் கதைத்து போராட்டத்தினை முன்னெடுக்கவேண்டும். நியாயமான தொழிற்சங்க போராட்டத்திற்கு எந்த வகையிலும் மாணவர் சமூகம் எதிராக நிற்கப் போவதில்லை. பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரின் போராட்டமானது நியாயமானது.

ஒரு மோசடிக் குற்றத்தினை மேற்கொண்ட நபரை உள்வாங்க நிர்வாகம் முற்படுவது எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாது முன்னாள் பதிவாளர் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் தொடர்பாகவும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் முடிவுகள் தொடர்பாகவும் இது தொடர்பான பல்கலைக்கழகப் பேரவையின் நிலைப்பாடு தொடர்பாகவும் மூத்த பேராசிரியர்கள் பல்கலைக் கழக சமூகத்தினர் மத்தியில் விளக்கத்தை அளிக்க துணைவேந்தர் பின்நிற்பது யாருக்கும் புரியாத ஒன்றாக உள்ளது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தை சரியான வழியில் நெறிப்படுத்த வேண்டும். எமது மாணவர்களின் கல்வியை சீரான பாதையில் இட்டுச் செல்ல வேண்டும் என்ற எண்ணக்கரு துணைவேந்தருக்கு இருக்குமென்றால் உரிய பிரச்சினைகளுக்கு விரைவாக தீர்வினை எட்டியிருப்பார். துணைவேந்தருடைய நழுவல் போக்குகள் எமது மாணவர் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை தோற்றுவிக்கின்றது. எமது பல்கலைக்கழக நிர்வாகத்தை கட்டிவளர்க்க வேண்டிய பொறுப்பும் துணை வேந்தருக்குத் தான் உண்டு.

இதனை விடுத்து பல்கலைக்கழக பேரவையின் முடிவு என்று பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கான தவறான முடிவுகளை துணைவேந்தர் எடுப்பது ஒட்டுமொத்த நிர்வாகத்திற்கும் இழுக்காகவே அமையும். அத்துடன், பல்கலைக் கழகத்தின் உயர்மட்டத்தில் நிர்வாகத்தை சீர்படுத்த வேண்டிய பேரவையின் சில தவறான முடிவுகள் பேரவை மீது மாணவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் சீரழிக்கின்றது. இந்த அடிப்படையில் பேரவையின் சில முடிவுகள் மாணவர்கள் ஏற்க முடியாது என்று இன்றைய கூட்டத்தில் தெளிவாக சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள்.

குறிப்பாக எமது பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள் எமது பேராசிரியர்கள் தவிர்ந்த ஏனைய 12 நபர்களில் சிலர் பல்வேறு அரசியல் செல்வாக்கிற்கு மத்தியில் பல்கலைக்கழகத்துடன் தொடர்பற்றவர்களாக பேரவையில் இருப்பதால் அவர்களுடாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் எமது பல்கலைக்கழக செயற்பாட்டிற்கு ஆக்கபூர்வமாக இருக்குமா? என்பதுதான் எமது நிலைப்பாடு.

குறிப்பிட்டுச் சொன்னால் ஒரு சில பேரவை உறுப்பினர்கள் பல்கலைக்கழக சமூகத்திற்கு வெளியில் இருந்து இலாபத்திற்காக உள்நுழைந்தவர்கள் தமது அரசியல் இலாபத்திற்காகவே பல்கலைக்கழக பேரவையையும் பயன்படுத்த நினைப்பார்களே தவிர ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க மாணவர்களுக்காக செயற்படுவார்களா? என்பது பிரதான கேள்வியாகும். ஏனென்றால் குற்றம் இழைத்த ஒரு பதிவாளரை மீள எடுப்பதற்கு பல்கலைக்கழக பேரவை முனைகின்றது என்பதிலிருந்து ஒன்றை விளங்கிக்கொள்ள முடிகின்றது. அதாவது ஒரு நிறுவனத்தில் இருக்கின்ற மோசடிகளை அகற்றவேண்டிய பேரவை அதற்குத் துணைபோய் அதனை வளர்க்க முற்படுவது எந்தவகையில் நியாயமான முடிவாக அமையும்? எனவே, பல்கலைக்கழக பேரவை எடுக்கின்ற முடிவுகள் எப்போதும் நியாயமானதாக முன்மாதிரியான போக்காக அமையவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அத்தோடு, தற்போது இருக்கின்ற பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வினை ஏற்படுத்தி மாணவர்களது இயல்பான கல்வி செயற்பாட்டிற்கு துணைவேந்தர் உட்பட உயர் மட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தோடு மருத்துவபீட மாணவர்களின் பிரச்சினைகளும் விரைவாக தீர்க்கப்பட வேண்டும். அவர்களது கல்விச்செயற்பாடு மீள ஆரம்பிக்க அதற்குரிய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதனை வலியுறுத்துகிறோம்.

கல்விசாரா ஊழியர் சங்கம் தனது போராட்டத்தினை இடைநிறுத்தி மாணவரது கல்வி நலனுக்காக உதவவேண்டும். பதிவாளரின் மோசடியை மாணவர்களினால் ஏற்றுக் கொள்ளமுடியாது. அவரை எந்த வகையிலும் கல்கலைக்கழகத்தினுள் மீள அனுமதிக்க முடியாது. தற்போது அவரை மீள எடுப்பதற்காக நிர்வாகம் எந்த வகையான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. ஆனால், அவரை மீள நிர்வாகம் எடுக்க முற்படுமானால் அதனை பல்கலைக்கழக மாணவர்களும் ஊழியர்களும் இணைந்து அதற்கு எதிராக போராடுவதற்கு முடிவு செய்துள்ளோம்.

பதிவாளர் மோசடி என்பது, பல்கலைக்கழகத்திற்கு பொதுவான பிரச்சினையாகும். எனவே பல்கலைக்கழக பேரவை அவர் தொடர்பாக எடுத்த நடவடிக்கையை துணைவேந்தர் மாணவர் ஒன்றியம் குறிப்பிடுகின்ற பிரதிநிதிகள் முன்னிலையில் விளக்கம் அளிக்க வேண்டும்.

இதேவேளை மருத்துவபீட மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக நாளை அடையாள பகிஷ்கரிப்பை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

# ஆசிய மூலவள நிலையத்தின் உயரதிகாரிகள் யாழ் வருகை

(யாழ்ப்பாணம்)

பசுபிக் ஆசிய மூலவள நிலையத்தின் உயர் அதிகாரிகள் குழுவொன்று யாழ்ப்பாணத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்வதுடன் கடற்தொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளனம், பிரதேச சமாசங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த இந்தக் குழுவினர் இன்று மாலை 4 மணிக்கு யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்க சமாசங்களின்சம்மேளனத்திற்கு சென்று பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளனர்.

காலை 9 மணிக்கு நாவாந்துறை கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகளை சந்திக்கவுள்ள இவர்கள் அங்குள்ள இறால் தொழிற்சாலையையும் பார்வையிடவுள்ளனர்.

மாலை நான்கு மணிக்கு பாஷையூர் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கத்திற்கு விஜயம் செய்யவுள்ள இவர்கள் கருவாடு உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களையும் சந்திக்கவுள்ளனர்.

மறுநாள் காலை 10 மணிக்கு வடமராட்சி - மணற்காடு பொற்பதி ஆகிய கிராமங்களுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

அடுத்து சனிக்கிழமை காலை 10 மணிக்குவடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்துக்கு விஜயம் செய்யவுள்ள இவர்கள் அங்கு கடற்தொழிலாளர்களின் தேவைகள் பற்றி கலந்துரையாடவுள்ளனர். (21)


## தவறிவிட்டது

கறுப்பு நிற பிரயாணப் பை ஒன்று நேற்று (30.03.2005) முகமாலை சோதனைச் சாவடியை அண்மித்த பகுதியில் தவறிவிட்டது. சில முக்கியமான பெறுமதி மிக்க பொருட்களும் ஆவணங்களும் இருப்பதால் கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் - 0602213423/021 - 4590515

(C/3975)



## மரண அறிவித்தல்



### விக்கினேஸ்வரன் சிறிகுமார்

(கல்லுடைக்கும் ஆலை உரிமையாளர்)

கோண்டாவில் கிழக்கு, கொட்டைக் காடு வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட விக்கினேஸ்வரன் சிறிகுமார் 28.03.2005 திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை விக்கினேஸ்வரன் மற்றும் யோகராணி தம்பதியினரின் மூத்த புதல்வனும், உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த கந்தையா வேலாயுதம் - காலம் சென்ற மகேஸ்வரி தம்பதியினரின் மருமகனும் தயாலக்சுமியின் அன்புக் கணவரும், தயாவரன், சிறிகரன், குகபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகுமார், மோகனதாஸ் , காலஞ் சென்ற சிவானந்தராசா மற்றும் கமலினி, செல்வமலர், பவானி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாந்தகுமார், சசிரூபன் , ஜீவானந்தன் , தயாளினி, தயாவதி, தயாரூபி, தயானந்தன், காலஞ் சென்ற தயாபரன் மற்றும் தயாசெல்வி, தயாஜோதி ஆகியோரின் மைத்துனரும் லரினா, நிசாந்தினி, தாரணி ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
க. வேலாயுதம்
(மாமா)

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்

(1108)



## 31ஆம் நாள் நன்றி நவிலல்

மீசாலையைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி கட்சன் வீதியில் வசித்து வந்தவருமான அந்தோனிப்பிள்ளை சவரிமுத்து அவர்கள் 11.03.2005 வியாழக்கிழமை காலமானார். அன்றைய தினமும் அதற்குமுன் நோயுற்றிருந்த வேளை வட்டக்கச்சி மருத்துவமனை பொறுப்பதிகாரி, தாதிமார் மற்றும் மரணமானபின் லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், அயலவர்கள், மலர்வளையம் சாத்தியோர், அன்றைய தினம் நாம் துக்கத்தில் இருந்தவேளை ஆறுதல் கூறியோருக்கும். மேலும் பல உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (31.03.2005) அன்னாரின் ஆத்ம சாந்திக்காக மாலை 5 மணிக்கு மாயவனூர் அன்னை வேளாங்கன்னியில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அவ்வேளை அன்றைய தினம் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
கிருஸ்ரின் (ராசன்)
மகன்

(C/3637)



YAMAHA
Touching Your Heart

யமஹா இலவச மெக்கானிக் சேவிஸ்

இடம்- யமஹா பிளாஸா
காலம்- ஏப்ரல்1ஆம்2ஆம் திகதி
நேரம்- காலை9.00-மாலை5.00
யமஹா மோட்டார் கம்பனியும் யாழ்.ஏக விநியோகஸ்தர்கள் யமஹா பிளாஸாவும் இணைந்து நடாத்தும் அனைத்து ரக யமஹா மோட்டார் சைக்கிள்களுக்கான இலவச மெக்கானிக் சேவிஸ் யமஹா கம்பனியின் விசேட தொழில்நுட்பவியலாளர்கள் கலந்துகொள்கின்றனர் இந்நிகழ்வில் அனைத்து யமஹா உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்



YAMAHA PLAZA
யமஹா பிளாஸா
298 KKS Road, Jaffna.
021 4590 200
0777 563 803
(C/3936)



நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
சரத்குமார் நமீதா வடிவேலு நடித்த
ஏய்
குளிரூட்டப்பட்டது
01 ஆம் திகதி முதல்
குருதேவா
கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேல், மும்தாஜ்
லண்டன்
இயக்கம்: சுந்தர்.C
ரிக்கெற்முற்பதிவு செய்துகொள்ளலாம்
கா.நே: 10.30, 2.30, 6.30 மட்டும்
(சி-3859)

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
பார்த்தீபன், காவேரி, மாஸ்ரர், அஸ்வின் மற்றும் பலர் நடித்த
(சிறந்த குடும்ப காவியம்)
கா.நேரம்: 10.30, 2.30,6.30, 9.30, (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
சில தினங்கள் மட்டும்
சூர்யா, ஜோதிகா நடித்த
மாயாவி
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், திரிஷா நடித்த
கில்லி
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)



## அறிவித்தல்

மாநகர சபை
யாழ்ப்பாணம்

ஒப்பந்தக்காரர்களை பதிவுசெய்தல்

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகள், பெட்டிமதகுகள், வடிகால்களை புனரமைப்பதற்கும், கட்டடங்களைப் புனரமைப்பதற்கும் நிர்மாணிப்பதற்கும்.

- கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
- விவசாய சம்மேளனங்கள்
- கூட்டுறவுச் சங்கங்கள்
- சமுர்த்திச் செயலணிகள்
- "இக்ராட்" பதிவுள்ள ஒப்பந்தக்காரர்கள்

யாழ். மாநகரசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து தங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

01.04.2005 தொடக்கம் 15.04.2005 வரை அலுவலக நேரத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு யாழ். மாநகர சபையின் வேலைப்பகுதியுடன் தொடர்பு கொள்ளவும்.

கலாநிதி க. குணராசா
ஆணையாளர்
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

29.03.2005
திகதி

(C/3974)

### செங்கடலில் தத்தளித்த

# 137 இலங்கையரை மீட்டு வர விசேட பொலிஸ் குழு எகிப்துக்கு

(கொழும்பு)

செங்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த இலங்கையர்கள் தொடர்பாக ஆராய்வதற்காக இலங்கை பொலிஸ் குழுவொன்று எகிப்துக்குப் பயணமாகியுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் உதவியுடன் இந்தக்குழு அங்கு சென்றுள்ளது.

அத்துடன், சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு ஆட்களை அழைத்துச் செல்லும் நால்வர் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத குடியேற்றங்களைத் தடுக்கும் பிரிவின் பணிப்பாளர் சமரதுங்க தெரிவித்தார்.

வென்னப்புவ பகுதியைச் சேர்ந்த ஒருவர் எகிப்தில் வேலை பெற்றுத் தருவதாக இவர்களை அழைத்துச் சென்றுள்ளமையும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சென்ற படகு செங்கடல் பகுதியில் பழுதடைந்ததால் தத்தளித்த அவர்கள் அனைவரையும் எகிப்தியர்கள் காப்பாற்றியுள்ளனர்.

செங்கடல் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட 137 இலங்கையர்களில் அதிகமானவர்கள் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

உறவினர்கள் மூலம் இவர்களுக்கான விமானக் கட்டணங்கள் அறவிடப்பட்டு அவர்களை இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுத்துவருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## வாழ்க்கைச் செலவு 1200 ரூபாவால் உயர்வு!

### நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் குடும்பமொன்றுக்கான வாழ்க்கைச்செலவை விட இப்போது மேலதிகமாக 1,200 ரூபாவைச் செலவிடவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் வரவு-செலவுத் திட்டங்களே இதற்குக் காரணம் எனவும் ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசாங்கத்தின் நிர்வாகச் செயற்பாட்டினால் சகல பொருட்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. எதிர்வரும் சிங்கள தமிழ்ப் புத்தாண்டுக்கு முன்பாக எரிபொருள் மற்றும் சமையல் வாயுவின் விலைகள் அதிகரிக்கும்.

நீர்க்கட்டணமும் மாவின் விலையும் அதிகரித்ததனால் ஒரு இறாத்தல் பாணின் விலை 18 ரூபாவில் இருந்து 20 ரூபாவரை அதிகரிக்கப்பட்டுள்ளது. மருந்து வகைகளின் விலைகளும் 30 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் தாளத்துக்கு ஏற்ப ஆடினால் அதுவே அரசின் இறுதியாட்டமாக இருக்கும்!

### விமல் வீரவன்ச எச்சரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தாளத்துக்கு அரசு இனியும் ஆடிக்கொண்டிருக்க முடியாது. இன்னொரு தடவை விடுதலைப் புலிகளுக்கு சாதகமாக அரசு செயற்படுமானால் அதுவே அரசின் இறுதியாட்டமாக இருக்குமென, ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற தொழில் பெறுனர் கூட்டமைப்பின் வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரை நிகழ்[illegible]ம்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு பிரதேசங்களைப் புனரமைப்பு செய்வதற்கு அரசும், விடுதலைப் புலிகளும் இணைந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தவேண்டும். வெளிநாட்டு அமைப்புகளும் பொதுக் கட்டமைப்பை அவதானித்துக்கொண்டிருக்கின்றன.

நாம் பொதுக்கட்டமைப்பை ஆதரிக்கிறோம். எமது நாட்டின் பொருளாதார வளங்களை வெளிநாடுகள் சூறையாடுவதற்கு, வெளிநாட்டு சக்திகள் சதி செய்துள்ளன. அத்துடன் அரச மட்ட அதிகாரங்களை விடுதலைப் புலிகளுக்குப் பெற்றுக்கொடுக்க வெளிநாட்டு சக்திகள் முனைப்புடன் செயற்படுகின்றன.

விடுதலைப் புலிகளுடன் அப்போதைய அரசாங்கம் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தினூடாக ரணில் விக்கிரமசிங்க புலிகளுக்கான முதல் அங்கீகாரத்தை வழங்கினார்.

இதேவேளை, கடந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தில் பல்வேறு வெளிநாட்டு சக்திகள் நாட்டின் பொருளாதார வளங்களை சூறையாட முற்பட்டன. எனினும் எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும், அந்த முயற்சிகள் கைவிடப்பட்டன எனத் தெரிவித்தார்.



(தே)

## நாளொன்றுக்கு 6 பேர் விபத்துக்களில் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் 4 மணித்தியாலங்களுக்கு ஒருவர் என்ற ரீதியில் - நாளொன்றுக்கு ஆறு பேர் வாகன விபத்துக்களில் உயிரிழப்பதாக போக்குவரத்து பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவதானமில்லாமல் வாகனத்தைச் செலுத்துபவர்களாலேயே அதிகளவிலான விபத்துக்கள் நடப்பதாகவும் - இத்தகைய சாரதிகள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் திணைக்கள போக்குவரத்து பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்கி பீரிஸ் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் 53458 வீதி விபத்துக்கள் இடம்பெற்றதாகவும் இவற்றில் [illegible]16 பேர் உயிரிழந்ததாகவும் பொலிஸ் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

## ஜே.வி.பியுடன் அனுரா பேச்சு; போராட்டம் கைவிடப்பட்டது!



(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களை வேலைநிறுத்தத்தில் ஈடுபடுத்தி அரசாங்கத்துக்கு தகுந்த படிப்பினையை வழங்கவுள்ளதாக அச்சுறுத்திய ஜே.வி.பி, அந்த நடவடிக்கையைக் கைவிட்டுள்ளது.

உல்லாசப் பயணத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவின் விசும்பாயா அலுவலகத்தில் அரசாங்க சிரேஷ்ட அமைச்சர்களுக்கும் - ஜே.வி.பியின் முக்கியஸ்தர்களுக்குமிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்தே ஜே.வி.பி இந்த முடிவை எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பேச்சுவார்த்தையில் மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த, நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, உல்லாசப்பயணத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க, பிரதியமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோரும், ஜே.வி.பி சார்பில் அமைச்சர் கே.டி.லால்கந்த, நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மற்றும் மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

இந்தக் கூட்ட முடிவில் தாம் திட்டமிட்டிருந்த வேலை நிறுத்தத்தை நிறுத்துவதெனவும் - ஆனால், தமது கோரிக்கைகள் தொடர்பான அரசின் நிலைப்பாட்டுக்காக அடுத்த இரண்டு வாரத்துக்கு தாம் காத்திருப்பதெனவும் ஜே.வி.பி தீர்மானித்தது.

# கரேஜஸ் கப்பல் மூலம் 75 வீத பலம் அதிகரிப்பு!

### கடற்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவிலிருந்து பெறப்பட்ட கரேஜஸ் கப்பலை இணைத்துக்கொண்டதன் மூலம் கடற்படையின் பலம் 75 வீதத்தால் அதிகரித்திருப்பதாக கடற்படைத்தளபதியும் மற்றும் கூட்டுப் படைத் தளபதியுமான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இந்தக் கப்பலைக் கடற்படைக்குக் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகக் கப்பலொன்றைத் தருமாறு அமெரிக்க அரசாங்கத்தைக் கோரியிருந்தோம். அதற்கமைய அமெரிக்க அரசாங்கம் எமக்கு இந்தக் கப்பலை வழங்கியது. 2004 ஆம் ஆண்டு இந்தக் கப்பலைப் பொறுப்பேற்ற பின்னர் தேவையானவர்களை அமெரிக்காவுக்கு அனுப்பி கப்பலை முழுமையாகப் புனரமைப்புச் செய்தோம். இந்தக் கப்பல் நீண்ட கடல் பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளது.



இந்தக் கப்பலைப் பெற்றதன் மூலம் நாம் மேலும் 75 வீதம் பலம் பொருந்தியவர்களாகியுள்ளோம்.

இதனால் எவ்வித இடையூறுகளும் இன்றி ஆழ்கடல் கண்காணிப்பில் இந்தக் கப்பலைப் பயன்படுத்தமுடியும் என்றார். (தே,01)

### மர்மநோய் தொடர்பான விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

ஊவா மாகாணத்தில் ஏற்பட்டுள்ள இனந்தெரியாத மர்மநோய் தொடர்பாக கொழும்பு சுகாதார ஆய்வு மையமும் தொற்றுநோய்கள் தொடர்பான விசேட பிரிவும் தமது பரிசோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

ஊவா பரணகம, மஸ்பன்ன வித்தியாலயத்தின் உப அதிபரும், இரு மாணவர்களும் திடீரென மயக்கமடைந்து உயிரிழந்தனர்.

இந்த மரணங்கள் தொடர்பாக மாகாண சுகாதார அமைச்சினால் விசாரணைகள் நடத்தப்பட்டாலும், இந்த மரணங்களுக்கான காரணங்கள் தெளிவாக கண்டுபிடிக்கப்படாததன் காரணமாக - மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (01)

### எஸ்.பிக்கு விதிக்கப்பட்ட

## தண்டனையை மாற்றுவதற்கு எந்த சட்டஅதிகாரமும் இல்லை

### சட்ட மா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

எஸ்.பி.திஸநாயக்காவிற்கு உயர் நீதிமன்றம் விதித்த சிறைத்தண்டனைத் தீர்ப்பை மாற்றுவதற்கோ அது தொடர்பாக குறை கூறுவதற்கோ எவ்வித சட்டரீதியான அதிகாரமும் இல்லையென மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

சிறைத்தண்டனையை அனுபவித்துவரும் எஸ்.பி.திஸநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ரத்துச் செய்வதை தடைசெய்யுமாறு தாக்கல் செய்யப்பட்ட மனுமீதான விசாரணைகளின் போதே சட்ட மா அதிபர் சார்பில் - பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிவான்களான கே.சிறீபவன், ரஞ்சித் டீ சில்வா ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனுவில் நாடாளுமன்றப் பொ[illegible]துச்செயலர், தேர்தல் ஆணையாளர் உட்பட சிலர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த மனுவுடன் தொடர்புடைய இரண்டு தரப்பினரும் எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி தங்களது கருத்துக்களை எழுத்து மூலம் அறிவிக்க வேண்டுமென மேன்மறையீட்டு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

## அடுத்த இருவாரங்களுக்குள் சந்திரிகா தீர்க்கமான முடிவு!

### சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த இரண்டு வார காலத்துக்குள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்க்கமான சில முடிவுகளை எடுக்க விருப்பதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

சுனாமியால் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஒன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசும்போது-

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த முடிவுகள் இலங்கைப் பிரச்சினை உள்ளிட்ட நாட்டின் பாரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் அமையும் என்றும் குறிப்பிட்டார்.

## ஜனாதிபதி சந்திரிகா இன்னும் 6 வருடங்கள் ஆட்சியிலிருப்பாராம்

### அனுரா கூறுகிறார்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடுத்த 6 வருடங்களுக்கு ஜனாதிபதியாக இருப்பார் என அமைச்சரும், ஜனாதிபதியின் சகோதரருமான அனுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 6 வருடங்களுக்கு தேர்தல் இடம்பெறமாட்டாது எனத் தெரிவித்த அவர் -

எஸ்.பி.திஸநாயக்க சிறை செல்வார் என தான் கூறியதும், மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வீட்டுக்குச் செல்லும் எனக் கூறியதும் எப்படி உண்மையாகினவோ, அவ்வாறே தனது இந்தக் கூற்றும் உண்மையாகும் என அனுரா பண்டாரநாயக்க தெரிவித்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (01)

# பாகிஸ்தான் 8 விக்கெட்டுக்களால் இந்திய ஏ அணியை வெற்றிகொண்டது



இந்தியாவுக்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், இந்திய ஏ அணிக்கும் இடையில் நேற்று ஹைதராபாத்தில் நடைபெற்ற 45 ஓவர்கள் கொண்ட ஒருநாள் போட்டியில், பாகிஸ்தான் அணி எட்டு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் அப்துல் ரசாக், இந்திய ஏ அணியை துடுப்பெடுத்தாட அழைத்தார். இதன் படி தவான் மற்றும் டோனி இருவரும் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய போதிலும், இவர்கள் சொற்ப ஓட்டத்தைப் பெற்றிருக்கையில், நவீட் உல் ஹசன் இருவரையும் பிரித்தார்.

இதில் தவான் 8, டோனி 3 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். இதன் பின்னர் வந்தவர்களில் ஸ்ரீராம் 38 ஓட்டங்களுடன் ரன் அவுட்டானார். 20 ஓட்டங்களுடன் வேணுகோபால் ராயும், ரெய்னா 55, தீரஜ் பட்டேல் 18, பவார் 16, ஓட்டங்களுடனும் பகதுலே மற்றும் பண்டாரி இருவரும் ஆட்டமிழக்காமல் 12, 1 ஓட்டங்களைப் பெற்றனர். 45 ஓவர்கள் நிறைவில் இந்திய ஏ அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. இதில் 18 உதிரி ஓட்டங்களும் அடங்கும்.

பந்து வீச்சில் ஹசன் 2, இப்திகார் அஞ்சும், சகீட் நசீர் மற்றும் அர்ஷத் கான் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதன் பின்னர் 190 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில்



களமிறங்கிய பாகிஸ்தான் 41 ஓவர்களிலேயே அந்த இலக்கை எட்டியது. இதில் சல்மான் பட் 70, மொகமட் கபீஷ் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, சொகைப் மலிக் மற்றும் அப்துல் ரசாக்இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 81, 1 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்து வீச்சில் போஸ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

## விளையாட்டு

# நான்குமுனை கிரிக்கெட் போட்டி ஏப்ரல் 3ஆம் திகதி ஆரம்பம்


யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையால் வருடா வருடம் நடத்தப்படும் நான்முனை கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இவ்வருட ஆட்டங்கள் எதிர்வரும் 3ஆம் திகதிமுதல் நடைபெறவுள்ளன.

இந்த வருட சுற்றுப்போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியுடன், சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம், தெல்லிப்பளை யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் என்பவற்றுடன் இம்முறை யாழ்.பற்றீசியன் விளையாட்டுக்கழகம் நான்காவது அணியாக கலந்துகொள்ளவிருக்கிறது.

கடந்த வருடம் முதல் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையால் நடத்தப்படும் இந்தச் சுற்றுப்போட்டி லீக் முறையில் நடத்தப்பட்டு முதல் இரு இடங்களைப் பெறும் அணிகளிடையே இறுதிப்போட்டி நடத்தப்படுகிறது.

நான்காவது இடத்தைப் பெறும் அணி அடுத்து வரும் சுற்றுப்போட்டியில் நீக்கப்பட்டு புதிய அணி தெரிவு செய்யப்படும். இந்த அடிப்படையில் கடந்த வருடம் நான்காம் இடத்தைப் பெற்ற கொக்குவில் கே.சி.சி.சி விளையாட்டுக்கழக அணி நீக்கப்பட்டு பற்றீசியன் அணி சேர்க்கப்பட்டுள்ளது.

(58)



நஷ்டாக் ஓபன் ரெனிஸ் போட்டியில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ரஷ்யாவின் எலினா லிகோட் கோவாவை 6 - 4, 1 - 6, 6 - 4 என்ற கணக்கில் வீழ்த்திய மகிழ்ச்சியில் இருப்பதை முதலாவது படத்திலும் இதே ரெனிஸ் தொடரின் காலிறுதி ஆட்டத்தில் தமது சகோதரியான வீனஸ் வில்லியம்ஸிடம் தோல்வியுற்ற செரினா, ரெனிஸ் மட்டையை முறிப்பதை அடுத்த படத்திலும் காணலாம்.

# இலங்கை கிரிக்கெட் அணி 19ம் திகதி இந்தியா பயணம்

(சென்னை)

ஐந்து ஒருநாள் போட்டிகளைக் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக இலங்கை கிரிக்கெட் அணி எதிர்வரும் 19ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்லவுள்ளது.

இந்தப் போட்டிகள் ஏப்ரல் 23, 26, 29, மே2 மற்றும் 5 -ஆம் திகதிகளில் நடைபெறும்.

மொகாலி, ஜெய்ப்பூர், நாக்பூர், ராஜ்கோட், ஆகிய நகரங்களில் போட்டி நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் 3 ஆம் திகதி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் கூட்டத்தில் இது தொடர்பாக முடிவு செய்யப்படும்.

இதற்கிடையே ஏப்ரல், மே மாதங்களில் அதிக அளவு வெயில் இருக்கும் என்பதால், இலங்கைத் தொடரில் விளையாட இந்திய வீரர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர். இதனால் அனைத்து ஆட்டங்களையும் பகல் - இரவாக நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

## டெஸ்ட் தரவரிசையில்

# இரண்டாம் இடத்தைப் பிடிக்கும் வாய்ப்பை இழந்தது இந்தியா

சர்வதேச கிரிக்கெட் தர வரிசை பட்டியலில் 2 வது இடத்தை பிடிக்கும் வாய்ப்பை இந்திய அணி இழந்தது.

சர்வதேச கிரிக்கெட் தரவரிசை பட்டியல் தற்போது ரசிகர்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பை உண்டாக்கியுள்ளது. டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் அடுத்தடுத்து பல வெற்றிகளை பெற்றுவரும் அவுஸ்ரேலியா தொடர்ந்து முதலிடத்தை தக்க வைத்துள்ளது.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்ற இந்தியா, பின்னர் பெங்களூர் ஆட்டத்தில் தோல்வி அடைந்தது. இதன் காரணாக இந்தியா - பாகிஸ்தான் டெஸ்ட் தொடர் 1 - 1 என்ற புள்ளியில் சமநிலை பெற்றது.

ஒருவேளை இந்தத் தொடரை இந்தியா கைப்பற்றியிருந்தால், 2 ஆவது இடத்துக்கு இந்தியா முன்னேறியிருக்கும். இந்த வாய்ப்பை இந்திய வீரர்கள் கோட்டை விட்டனர். 108 புள்ளிகளுடன் 3 -வது இடத்தில் இருந்த இந்தியா தற்போது ஒரு புள்ளியை இழந்துள்ளது.

ஆனாலும் இந்தியாவின் தரவரிசையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. 101 புள்ளியில் இருந்த பாகிஸ்தான் ஒரு புள்ளி பெற்று தொடர்ந்து 5 ஆவது இடத்தை தக்க வைத்துள்ளது. இங்கிலாந்து அணி 2 ஆவது இடத்தில் நீடிக்கிறது.

தனிப்பட்ட வீரர்கள் என்று பார்க்கும்போது துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் கலிஸ் 886 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். பெங்களூர் டெஸ்ட் போட்டிக்கு முன்பாக ராவிட் முதலிடத்தில் இருந்தார்.

ஆனால் பாகிஸ்தான் அணிக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் அவர் சரியாக ஆடவில்லை. இதனால் அவரின் புள்ளியில் அதிரடியாக ச[illegible] ஏற்பட்டது. இந்த சரிவின் காரணமாக ராவிட் மீண்டும் 2-வது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். பந்து வீச்சில் மக்ரா, முரளிதரன், பொலக், அக்தர் வோன் ஆகியோர் முன்னணியில் உள்ளனர்.

# நல்லூர் பிரதேச செயலக விளையாட்டுப்போட்டி முடிவுகள்

(நெடுந்தீவு)

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவு கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கபடிப்போட்டியில் துர்க்கா விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

காந்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடிய துர்க்கா அணி 56:30 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. இப்போட்டியில் சிறந்த வீரராக துர்க்கா விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த திவாகரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை ஆண்களுக்கான எல்லே போட்டியில் 02:01 புள்ளி அடிப்படையில் காந்தி விளையாட்டுக் கழகம், துர்க்கா விளையாட்டுக்கழகத்தை வென்று சம்பியனாகியுள்ளதுடன், ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் லெவின் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை 02 ஓட்டங்களால் வென்று சம்பியனாகியுள்ளது. இதில் சிறந்த பந்துத் தடுப்பாளராக சுகுமாரனும், சிறந்த பந்து வீச்சாளராகவும், துடுப்பாட்ட வீரராகவும், இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாகவும் சர்வானந்தும் லெவின்ஸ்ரார் விளை யாட்டுக்கழகத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்டனர். அதேவேளை வலைப்பந்தாட்டம், பெண்களுக்கான கிரிக்கெட் மற்றும் எல்லே போட்டிகளில் கே.சி.சி.சி விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

வலைப்பந்தாட்டப்போட்டியில் துர்க்கா விளையாட்டுக்கழகத்தை 40:04 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றிபெற்றதுடன், இதன் சிறந்த விளையாட்டு வீராங்கனையாக கே.சி.சி.சி விளையாட்டுக்கழத்தைச் சேர்ந்த வினோஜா தெரிவுசெய்யப்பட்டார்.

கிரிக்கெட் போட்டியிலும் துர்க்கா விளையாட்டுக்கழகத்தை 5 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டதுடன் இதில் சிறந்த பந்துவீச்சாளர் சம்சுகா, துடுப்பாட்ட வீராங்கனை வினோஜா, பந்து தடுப்பாளர் சண்முகாசினி, ஆட்ட நாயகி வினோஜா ஆகியோர் கே.சி.சி.சி விளையாட்டுக் கழகத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்டனர்.

எல்லே போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை 02:01 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றி பெற்றது. இதில் சிறந்த வீராங்கனையாக வினோஜாவும் களத்தடுப்பாளராக அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த நிலாந்தியும் தெரிவுசெய்யப் பட்டனர்.

(113)



வேலணைப் பிரதேச விளையாட்டு விழாவில் வெற்றிபெற்ற கழகத்திற்கு விழாவின் பிரதம விருந்தினரும், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமான எஸ்.சிவசுவாமி வெற்றிக்கிண்ணம் வழங்குவதைக் காணலாம். (113)

# கங்கூலியை நீக்க வேண்டுமென இந்தியாவில் வலுவடையும் கருத்து!

(சென்னை)

தொடர்ந்து மோசமாக ஆடிவரும் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் கங்கூலியை கப்டன் பதவியிலிருந்து மட்டுமன்றி, அணியிலிருந்தும் நீக்க வேண்டும் என்று இந்திய பத்திரிகைகள் எழுதி வருகின்றன.

இது தொடர்பாக இந்திய பத்திரிகை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

பெங்களூர் டெஸ்ட் தோல்விக்கு கப்டன் கங்கூலியின் மோசமான ஆட்டமும் ஒரு முக்கியமான காரணமாகும். முதல் இனிங்சில் ஒரு ஓட்டத்தில் ஆட்டமிழந்தார். இரண்டாவது இனிங்சில் பொறுப்பற்ற முறையில் விளையாடி இரண்டு ஓட்டங்களை எடுத்தார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் போல்டானது அவருக்கே தெரியாததுதான் தான் எந்த முறையில் ஆட்டமிழந்தோம் என்பதை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதேநேரத்தில் பாகிஸ்தான் கப்டன் இன்சமாம் பொறுப்பை உணர்ந்து எப்படி ஆடினார். அவர் முதல் இனிங்சில் 184 ஓட்டங்கள் எடுத்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

கங்கூலியின் இந்த மோசமான ஆட்டம் தொடர்கிறது. அவர் சதமடித்து கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. 2003ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவுக்கெதிராக பிரிஸ்பேன் டெஸ்டில் கடைசியாகச் சதமடித்தார்.

பாகிஸ்தானுக்கெதிரான டெஸ்ட் தொடரில் அவர் 48 ஓட்டங்களை மட்டும் எடுத்தார். மொஹாலி டெஸ்டின் முதல் இனிங்சில் 21 ஓட்டங்களை எடுத்தார். இரண்டாது இனிங்சில் ஆடவில்லை. கொல்கத்தா டெஸ்டின் முதல் இனிங்சில் 12 ஓட்டங்களும் இரண்டாவது இனிங்சில் 12 ஓட்டங்களும் எடுத்தார்.

இதற்குமுன் அவர் விளையாடிய தென்னாபிரிக்கா, அவுஸ்ரேலியா தொடரிலும் சொற்ப ஓட்டங்களையே எடுத்தார். அவரின் துடுப்பாட்டம் மிகவும் கவலையளிக்கும் வகையில் உள்ளது.

தொடர்ந்து மோசமாக விளையாடும் கங்கூலி அணிக்குத் தேவை தானா என்ற கேள்வி எழுந்துள்ளது. எனினும், அவரின் தலைமையில் இந்திய அணி சாதனை படைத்தது உண்மைதான்.

ஆனால், தொடர்ந்து மோசமாக விளையாடும் ஒருவரால் அணிக்கு என்ன இலாபம். எனவே, அணியிலிருந்து நீக்கவேண்டிய கட்டாயத்தில் அவர் உள்ளார். அவருக்குப் பதிலாக கைவ், யுவராஜ்சிங்கிற்கு டெஸ்ட் அணியில் வாய்ப்புக் கொடுக்கலாம்.

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கு கங்கூலியைத் தேர்வுக்குழு கப்டனாகத் தெரிவுசெய்து விட்டது. இது தவறான முடிவு. அவரை



நீக்கிவிட்டு ராவிட்டுக்கு கப்டன் பதவி கொடுத்திருக்க வேண்டும். கங்கூலியே கப்டன் பதவியிலிருந்தும், அணியிலிருந்தும் விலகிச் செல்ல வேண்டும். அவருக்குக் கொடுக்கப் பட்ட கடைசி வாய்ப்பாக இதனைக் கருதவேண்டும்.

அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் ஒரு போட்டியில் சரியாக ஆடாவிட்டால் அணியிலிருந்து தூக்கிவிடுவார்கள். ஆனால், இந்தியாவில் நிலைமை வேறு. இதனைத் தேர்வுக் குழுவினர் மாற்றிக் காட்டவேண்டும் என்பதே ரசிகர்களின் எண்ணமாக உள்ளது என அந்தப் பத்திரிகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சாவகச்சேரி - சங்கானை இடையிலான பஸ்சேவை புதுவருடத்துடன் ஆரம்பம்!

(மட்டுவில்)

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் சங்கானையில் இருந்து சாவகச்சேரி வரை செல்லும் 775 ஆம் இலக்க பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தச் சேவையை மீள ஆரம்பிக்கக் கோரி, பலதடவைகள் பல தரப்பினராலும் கோரிக்கை விடப்பட்டபோதும், இந்தச் சேவை ஆரம்பிக்கப்படவில்லை.

இதனையடுத்து மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பொங்கல் நிகழ்வுக்காக நடத்தப்பட்ட விசேட போக்குவரத்துச் சேவையை இந்தப் பகுதி இளைஞர்கள் தடுத்தனர்.

இதனால் முதலாம் வாரம் ஒரு சில சேவையுடன் இந்த விசேட சேவை இடைநிறுத்தப்பட்டது.

இது சம்பந்தமாக மட்டுவில் பகுதி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், மட்டுவில் வடக்கு கிராம அலுவலரும், தென்மராட்சி அரசியற்துறையினரும், கோண்டாவில் முகாமையாளரும் கலந்துகொண்ட விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த 27 ஆம் திகதி மாலை 6 மணிக்கு மட்டுவில் வடக்கு கண்ணகை சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

இதன்போது பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளால் இந்தப் பேரூந்து சேவையின் அவசியம் பற்றி விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. இதனையடுத்துப் பதிலுரையாற்றிய கோண்டாவில் டிப்போ முகாமையாளர் - எதிர்வரும் புத்தாண்டை அடுத்து, திருத்தவேலை முடிந்து வரும் ஒரு பஸ்ஸை இந்த வழித்தடத்தில் சேவையில் ஈடுபடுத்துவதாக உறுதியளித்தார்.

இவரது உறுதிமொழியை அடுத்து பங்குனித் திங்கள் உற்சவ காலச் சேவையையும், தொடர்ந்து நடத்தும்படி கூட்டத்தில் கலந்து கொண்டோரால் விடுக்கப்பட்ட கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு , 3 ஆம் வார உற்சவத்துக்கு பஸ் சேவை வழமைபோல மேற் கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (24)

# பன்றித்தலைச்சி அம்மன் பொங்கல் உற்சவத்தில் பெருந்திரளான பக்தர்கள்

பங்குனித் திங்கள் 3 ஆம் கிழமை உற்சவத்தின்போது, மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்துக்குப் பெருந்தொகையான பக்தர்கள் வந்து குவிந்தனர்.

அதிகாலை 4 மணிமுதல் ஆலயத்தை வந்தடைந்த பக்தர்கள் பொங்கலிட்டும், அடியழித்தும், காவடிகள், பாற்செம்புகள் எடுத்தும் தமது நேர்த்திக் கடனை நிறைவு செய்தனர்.

பெருமளவில் குவிந்த பக்தர்களின் சன நெரிசலைப் பயன்படுத்தி திருட்டுச் சம்பவங்களும் இடம்பெற்றதாக கூறப்படுகிறது.

தனித்து தவறவிடப்பட்ட சிறுவன் ஒருவனிடமிருந்து கைச்சங்கிலி, சங்கிலி என்பனவும் ஆலயவாசலில் பொங்கல் படைத்துக் கொண்டிருந்த பெண்மணியொருவரது சங்கிலியும் அபகரிக்கப்பட்டன.

அதேவேளை, கணவனது பறவைக் காவடியுடன் வந்த மனைவியிடமிருந்த 15 ஆயிரம் ரூபா பணமும் திருட்டுப்போயுள்ளது.

இந்தச் சம்பவத்தில் தென்மராட்சி பிரதேச செய்லக சமுர்த்தி அலுவலர் பாமினி கேதீஸ்வரன் என்பவரே பணத்தைப் பறிகொடுத்தவராவார்.

ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் - நகை, பணம் என்பவற்றை எடுத்து வருவதைக் குறைக்குமாறும், அவ்வாறு தேவையின் நிமித்தம் கொண்டு வரநேரின் மிக அவதானமாக இருக்குமாறும் கிராம அலுவலரும், இந்து இளைஞர் மன்றத்தினரும் கோரியுள்ளனர். (24)

# வீதிகள் புனரமைப்பு தொடர்பாக யாழ். செயலகத்தில் கலந்துயைாடல்

யாழ். மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதான வீதிகளை அகலமாக்கி, புனரமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் - எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கார்ப் திட்டத்தில் - சிறிய உட்கட்டுமான வீதி தரமுயர்த்தல் திட்டம் ஆகிய திட்ட நடமுறைப்படுத்தலின் கீழ் சில இடங்களில் காணி சுவீகரிப்பு மேற்கொள்ளப்படவேண்டியுள்ளதுடன், வீதி அபிவிருத்தி அதிகாரசபை எல்லைக்குள் கட்டப்பட்ட கட்டடங்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் - கண்டி வீதி, யாழ்.- பருத்தித்துறை வீதி, யாழ். -பலாலி வீதி, யாழ். - கே.கே.எஸ் வீதி, யாழ். - மானிப்பாய் - கரைநகர் வீதி, யாழ். - பண்ணை, ஊர்காவற்துறை வீதி என்பனவே புனரமைக்கப்படவுள்ள வீதிகளாகும். (24)

# பூங்காவை அழகுபடுத்த வணிகர் கழகம் உதவி

(யாழ்ப்பாணம்)

சுப்பிரமணியம் பூங்காவை அழகுபடுத்துவதற்காக சிற்பங்களை வழங்குவதற்கு யாழ். வணிகர் கழகம் முன்வந்துள்ளது.

சுப்பிரமணியம் பூங்காவை நவீன மயமாக்கும் முகமாக தமிழ்த் தாய், நீர்வார்க்கும் சிலைகள், சிறுவர்களுக்கான யானைகள் போன்றவற்றை அமைப்பதற்கான உதவிகளை யாழ். வணிகர் கழகம் வழங்கவுள்ளது.

# ஐக்கிய சனசமூக நிலைய நிர்வாகச்சபை தெரிவு

ஆனைக்கோட்டை ஐக்கிய சன சமூக நிலையத்தின் 2005 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத்தெரிவு கடந்த மாதம் ஐக்கிய சனசமூக நிலையக் கட்டடத்தில் நடைபெற்றது.

புதிய தலைவராக மத்தியூஸ் அலெச்சீசியஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உப தலைவராக சிமியோன் பாபுவும், செயலாளராக யா. அலெக்ஸ்சாண்டரும், உப செயலாளராக செ.அமிர்தநிறஞ்சனும், பொருளாளராக ப.ஆனந்தராசாவும், பாலர் பாடசாலை தலைவராக யோ.யோன் சிங்கமும், நூல்நிலையப் பொறுப்பாளராக அ.அருள்தேவாவும், கணக்காய்வாளராக வ.இராதாகிருஸ்ணனும் சபையோரால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோஷ்டி மோதலில் இருவர் காயம்!

(யாழ்ப்பாணம்)

இரு குழுக்களிடையே ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடு முற்றியதால், ஒரு குழு - மற்றைய குழுமீது வழிமறித்துத் தாக்கியதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கொடிகாமத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வரணி இயற்றாலையைச் சேர்ந்த எஸ்.சிவதரன் (வயது 22), க.சிறிகாந் (வயது 22) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இரு குழுக்களிடையே நீண்ட நாட்களுக்கு முன்னர் ஏற்பட்டுள்ள பகைமை காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

சம்பவதினம் வரணியிலிருந்து கொடிகாமம் நோக்கி சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம் மற்றைய குழுவினர் வழிமறித்துத் தாக்கிவிட்டு, தப்பி ஓடிவிட்டதாகத் தெரியவருகிறது.

## வலி.வடக்கு பகுதியில் 65 வீடுகள் கட்ட நிதி ஒதுக்கீடு

உலக வங்கியின் ஆயிரம் வீட்டுத்திட்டத்தின் கீழ் - வலி.வடக்கு பிரதேச செயலகத்துக்கு 65 வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கென வசாவிளான் கிழக்கு, இளவாலை வடமேற்கு, வடக்கு, தெல்லிப்பளை கிழக்கு ஆகிய பகுதிகளில் காணிகள் தெரிவுசெய்யப்பட்டு மதிப்பீட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன . (101)

# சமபல கட்டுக்கோப்பால் சமாதானத்தை உருவாக்கியவர்கள் எமது போராளிகளே

## யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்

மேஜர் புகழமுதன் இலட்சியத்தோடு வாழ்ந்து, அதே இலட்சியத்துக்காகவே உயிர்நீத்த தியாகி. ஒருகால கட்டத்தில் நாம் கண்ணீர் கலந்த வாழ்க்கையில் அடிபடுகின்றவர்களாய் வாழ்ந்த நிலையை மாற்றி, திருப்பி அடிக்கும் அளவுக்கு எம்மை எம் தலைவர் வளர்த்துள்ளார் என யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கரவெட்டியில் நடைபெற்ற மேஜர் புகழமுதன் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

வடக்கு - தெற்கு என்று சமநிலையில் நின்று, சமபல இராணுவக் கட்டுக்கோப்பால் உருவாக்கப்பட்டதே சமாதானம். அந்தப் பலத்தை உருவாக்கியவர்களே போராளிகள். இவர்களைப் பிரதேசவாதத்தால் பிரித்து, சுயநல நோக்கத்துக்காக இவர்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தியவர்கள் - அவர்களாலேயே விரட்டியடிக்கப்படுவார்கள் என்று தலைவர் கூறியவாக்கு நிறைவேறியதைக் கிழக்கில் கண்கூடாகக் கண்டோம்.

எனவே, நாம் எமது இலட்சியப் பாதையில் மேஜர் புகழமுதன் வழிகாட்டி. அவன் சாகவில்லை, மாவீரர் கல்லறை தமிழரின் வரலாற்றுச் சின்னம். புகழமுதன் வரலாறு படைத்துவிட்டான் என்று கூறினார். (13)

# மீன்பிடிப் படகுகளுக்குத் தேவையான எரிபொருள் கொள்வனவுக்கு முத்திரை

இலங்கை கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தால் யாழ்.மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட 116 படகு, இயந்திரங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு பணத்துக்குப் பதிலாக முத்திரை வழங்கப்படவுள்ளது.

பதினேழரையடி தும்புக் கண்ணாடியிழைப் படகு முதலில் தொழிலை ஆரம்பிக்கும்போது 3 ஆயிரம் ரூபாவுக்குரிய முத்திரையும், பாரம்பரிய கலம் ஒன்றில் தொழிலை ஆரம்பிக்கும்போது 5 ஆயிரம் ரூபாவுக்குரிய முத்திரையும் வழங்கப்படவுள்ளன.

பல நாட்கள் கடலில் தங்கி நின்று தொழில் ஆரம்பிக்கும் படகு ஒன்றுக்கு 15 ஆயிரம் எரிபொருள் செலவு முத்திரை இன்னும் 2 வாரங்களில் வழங்கப்படுமென கடற்தொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் தெரிவித்தார். (21)

## ஒக்ஸிஜன் சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் ஒக்ஸிஜன் சிலிண்டருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இங்கு எட்டு சிலிண்டர்கள் உள்ள போதிலும், அவை நிரப்பப்படாது வெறுமையாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவசர தேவை காரணமாக கடந்தவாரம் கடன் அடிப்படையில் மந்திகை வைத்தியசாலையிலிருந்து ஒரு ஒக்ஸிஜன் சிலிண்டர் பெறப்பட்டது.

இந்தத் தட்டுப்பாடு காரணமாக மனநோயாளரும், ஏனைய நோயாளரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (101)

## தையல் இயந்திரங்கள் அன்பளிப்பு

புனர்வாழ்வு அமைச்சால் வழங்கப்பட்ட13 தையல் இயந்திரங்கள் வலி. வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வன்செயல்களால் கணவனை இழந்த விதவைகளுக்கே வலி. வடக்கு பிரதேச செயலகத்தில் வைத்து தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. (101)

# தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையை சொந்தக் கட்டடத்தில் இயக்க நடவடிக்கை

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் - தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையை, வெகு விரைவில் சொந்தக் கட்டடத்தில் இயங்க வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

மே மாதமளவில் சகல வைத்திய பிரிவுகளும் அந்தக் கட்டடத்தில் செயற்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

பல இட நெருக்கடிகளுக்கு மத்தியில் தற்பொழுது கூட்டுறவு வைத்தியசாலைக் கட்டடத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் இந்த வைத்தியசாலை - சொந்தக் கட்டடத்தில் இயங்கத் தொடங்கியதும் ஆய்வுகூட வசதிகள், எக்ஸ்றே வசதி, மன நோயாளருக்கான போதிய இடவசதி என்பன கிடைப்பதுடன், உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிதி உதவியுடன் பல அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்படும் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (101)




முன்னாள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனுக்கு அவரது சேவை நலனைப் பாராட்டி, செயலகம் நடத்திய விழாவில் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும், பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (13)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை எட்டு



பெயர் : ரு.நிவேதிகா
முகவரி : சித்தங்கேணி.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------------
முகவரி ----------------
பிறந்த ஆண்டு: ----------------

கூப்பன்கள் புத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------
பெற்றோர் ஒப்பம்

# மனிதனுக்கு உணவு மாடுகளுக்குத் தீவனம்



பொருண்மியம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**பச்சைத் தீவனம் - சைலேஜ் முறை**

தீவனப் புல் பாத்திகளில் வளர்கின்ற பச்சைப்புல் முழுவதையும் மாடுகள் தின்றுவிட முடிவதில்லை. அவ்வாறே அறுவடைக் காலங்களில் கிடைக்கின்ற பயிற்றங்கொடி, சோளப்பயிர் போன்றவற்றை முழுமையாக மாடுகள் தின்றுவிட முடிவதில்லை.

மற்றும் மழைக்காலங்களில், வேலியோரங்களிலும், காடுகளிலும் ஏராளமான புற்கள் அடர்ந்து வளர்ந்திருக்கும். அவை முழுவதையும் மாடுகள் மேய்ந்து தீர்த்துவிட முடிவதில்லை.

எனவே, மாடுகளுக்கு இடப்பட்டவை போக, எஞ்சிய தீவனப் பசும்புல்லையும், கொடிகள், பயிர்களையும், வேலியோரங்களிலும், காடுகளிலும் அடர்ந்து வளர்ந்துள்ள புல்லையும் சைலேஜ் என்னும் முறைப்படி பக்குவப்படுத்தினால், பல மாதங்கள் வரையில் அவற்றை மாடுகளுக்குப் பசும்புல் தீவனமாக - பச்சைத் தீவனமாக இட்டுவர முடியும்.

மழைக்காலத்துப் புல்லையும், பாத்திப் பசும்புல்லையும் தின்பதால் கிடைக்கின்ற பலன் நீண்ட நாட்களுக்குக் கிடைக்க வழியுண்டாகிறது.

**சைலேஜ் முறை என்றால் என்ன?**

நான்கு அல்லது ஐந்து அடி ஆழத்திலும், நீளம் - அகலம் தேவையான அளவிலும் குழிகள் வெட்ட வேண்டும். முதலில் மாவட்டத் தீவனப் புல், பயிர், கொடிவகைகளைப் பக்குவ நிலையில் அறுத்துக்கொள்ள வேண்டும். பின்னர் தட்டு வெட்டும் கருவியைக் கொண்டு சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் குழிகளில் ஒரே சீராக சுமார் ஒவ்வோர் அடி அளவுக்குப் பரப்புதல் வேண்டும்.

தண்ணீரில் உணவுக்குப் பயன்படும் உப்பைக் கலந்து அதில் ஓரளவு தெளித்து, நன்றாக மிதித்துக்கொண்டே குழிகளை நிரப்புதல் வேண்டும். நிலமட்டத்துக்கு மேலும் நான்கடி சுமாருக்குப் பரப்பி, குழியைத் தோண்டுவதற்கு வசதியாக அதன்மேலே மண்ணைப் போட்டு, காற்றுப் புகாதவாறு நன்கு மூடிவிட வேண்டும்.

ஆரம்பத்தில் இரண்டு வாரங்கள் வரையில் நாள்தோறும் நன்கு கவனித்து, அடிக்கடி நிரப்பப்பட்ட புல்துண்டுகள், அமிழ்ந்து கொண்டிருக்கும்போது, குழியின் மேல் தோன்றும் வெடிப்புகள் வழியாகக்காற்று உள்ளே புகாமல் மண்ணைத் தள்ளி மூடிக்கொண்டிருத்தல் வேண்டும்.

அதன்பின்னர், ஆறு வாரத்துக்குப் பிறகு ஒரு பகுதியிலிருந்து திறந்து, எடுத்து மாடுகளுக்குத் தீனியாக இட்டு வரலாம். மாடுகளும் நன்கு விரும்பித்தின்னும். புதியதாகப் பச்சையாக அறுத்துப் போடுவதற்கும் இதற்கும் குணத்தில் எந்தவித மாறுபாடும் இருக்காது. ஓராண்டுக்கு மேலும் இதனைக் கெடாமல் தீனியாக இட்டுவர முடியும்.

குழியின் அடிப்பாகம், கரைப்பகுதி, மேற்பகுதி ஆகியவற்றிலெல்லாம் தென்னை ஓலை அல்லது மாடுகள் தின்பதற்கு உதவாத தட்டு, தாள் போன்றவற்றை வைத்து, தீவனப்புல் துண்டுகள் மண்ணில் படாதவாறு அமைக்க வேண்டியது அவசியமாகும்.

இந்த சைலேஜ் முறையை நிரந்தரமாக விரும்புகின்றவர்கள், இதற்கேற்ற முறையில் குழிகள் வெட்டிக் கட்டடம் கட்டி சிமெண்ட் பூச்சு கொடுத்து வைத்துக்கொள்வது நல்லது.


இவ்வாறு செய்வதன்மூலம், பச்சைத் தீவனம் கிடைக்கிறது. மேலும், மழைக்காலங்களில் காயவைத்துப் போர்போட முடியாமல் தீவனப்புல், பயிர்கள் கெட்டுப்போவதைத் தவிர்க்கவும் முடியும்.

**உலர்ந்த தீவனம்**

உலர்ந்த தீவனம் என்பது வெயிலில் காய்ந்த தீனியாகும். பயிர்களின் கொடிவகைகள், நெல் வைக்கோல் போன்றவை அடங்கும். இவற்றை வெயிலில் நன்றாகக் காயவைத்து, எடுத்துப் போர் போட்டு வைத்துக்கொண்டு, நாள்தோறும் தேவையானளவில் எடுத்து மாடுகளுக்கு இட்டு வரலாம். ஆண்டு முழுவதும் இதனைப் பயன்படுத்தலாம்.

இந்தத் தீனி வகைகளைப் போர்போடும் போது, மிகவும் கவனம் செலுத்துதல் வேண்டும். போரிலுள்ள தீவனத்தட்டு மண்ணில் படாதவாறு இருக்கவேண்டும். முதலில் ஒரு அடி உயரமுள்ள கற்களை மூன்று அல்லது நான்கு வரிசையில் வரிசைக்கட்டு இரண்டு அடி இடைவெளிவிட்டு நீளவாக்கில் வைத்தல் வேண்டும். அவ்வாறு வைக்கப்பட்ட கற்களின் மீது நீளமான மரம் - மரப் பலகை வைத்தல் வேணடும்.

இதன் மீது உலர்ந்த தீவனத்தை அடுக்கி வைக்கவேண்டும். இந்தப் போருக்குள் மழை



நீர் இறங்குதல் கூடாது.

மழைநீர் போருக்குள் இறங்கினால் தீவனம் மக்கிக் கெட்டுவிடும்.

இவ்வாறு காய்ந்த தீவனங்களைப் போர் போட்டு வைத்துக்கொண்டு ஆண்டு முழுவதும் நாள்தோறும் தேவையானளவில் எடுத்து மாடுகளுக்கு இட்டுவரலாம்.

**கலப்புத் தீவனம்.**

மாடுகளின் வளர்ச்சிக்கும், வலிமைக்கும், பாலின் செழுமைக்கும், பெருக்கத்துக்கும் தேவையானளவில் கலப்புத் தீனி இடுதல் வேண்டும்.

கலப்புத் தீவனம் பால் மாடுகளுக்கும், உழவு மாடுகளுக்கும் இன்றியமையாத ஒன்று.

**கலப்புத் தீனிகளாவன**

1. பருத்திக்கொட்டை, கோதுமைத்தவிடு, சோளம் ஆகிய மூன்றையும் ஏற்ற அளவில் கலந்து மாடுகளுக்கு வைக்கலாம்.

2. எள்ளுப் புண்ணாக்கு, அரிசித் தவிடு, துவரம் பொட்டு, கொள்ளு ஆகியவற்றைக் கலந்து மாடுகளுக்கு வைக்கலாம்.

3. கடலைப் புண்ணாக்கு, பருத்திக் கொட்டை, அரிசித் தவிடு, சோளம், கொள்ளு ஆகியவற்றை ஏற்ற அளவில் கலந்துவைக் கலாம்.

நிலமில்லாது மாடு வளர்க்க விரும்புகிறவர்கள் -

கலப்புத் தீவனங்களுக்குத் தேவை யான பொருட்களைக் கடைகளில் வாங்கி வைத்துக்கொண்டும், அறுவடைக் காலங்களில் சோளம், நெல் வைக்கோல் போன்றவற்றை விலைக்கு வாங்கியும் வைத்துக்கொண்டு, மாடுகளுக்கு ஏற்றவையில் ஏற்ற அளவில் இட்டு வருதல் வேண்டும். (முற்றும்)

# கரட் உற்பத்தி

(சென்றவாரத் தொடர்ச்சி...)



சிலவேளைகளில் பயிர்களை இரண்டாவது முறையாகவும் ஐதாக்க வேண்டி இருக்கும். சீதா எலிய விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் பின்வரும் களை நாசினிகள் உகந்ததென அவதானிக்கப்பட்டுள்ளன.

1. அவலோன் - 880 கிராம்/4000 சதுர மீற்றர்.

2. சென்கர் - 250 கிராம்/4000 சதுர மீற்றர்.

3. பினைவின் - 250 கிராம்/4000 சதுர மீற்றர்.

விதைத்தலுடன் இந்தக் களை நாசினிகளுள் ஒன்றைப் பிரயோகிக்க வேண்டும். இதன் பின்னர், பயிர் நிலத்தை மூடி வளரும் வரையும் நிலத்தைக் குழப்பக் கூடாது. அவலோன் களை நாசினியை விதைகளை விதைத்து ஒரு மாதத்தின் பின்னும் பயன்படுத்தலாம்.

**கரட்டைத் தாக்கும் பீடைகள்**

1. வெட்டுப்புழு

இந்தப் புழு கரட் பயிருக்குப் பெருஞ் சேதத்தை ஏற்படுத்துகிறது. இந்தப்புழு வளரும் பகுதியை வெட்டுவது மட்டுமல்லாது, வேர்ப் பகுதியையும் தாக்குவதால், கரட்டின் சந்தை வாய்ப்பு குறைவடைகிறது.

ஆரம்பத்தில் கட்டுப்படுத்தும் முறைகளைக் கைக்கொள்ளாவிட்டால், வேர்கள் பெருக்க ஆரம்பிக்கும்போது, இரசாயனக் கட்டுப்படுத்தும் முறைகளைக் கைக்கொள்வது அவசியமாகும்.

2. விலாங்குப் புழுக்கள் (இலைப் புழுக்கள்)

இந்தப் புழுக்கள் வேரைத் தாக்குவதனால், அதன் சந்தைவாய்ப்பு குறைவடைகிறது. இந்தப் புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்குச் சுலபமான முறைகள் எதுவும் இல்லை.

எனினும், விவசாயிகள் காபோபியூறன் குறுணலை 6 - 3 கிலோகிராம் 4000 சதுர மீற்றர் வீதம் பிரயோகித்து இதனைச் சிறப்பாகக் கட்டுப் படுத்துகின்றார்கள்.

**3. நத்தைகள்**

நத்தைகள் - வளரும் பயிர்களைச் சேதப்படுத்துகின்றன. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு 'மெற்றா இரையுணவுகளைப்' பயன்படுத்தலாம்.

**நோய்கள்**

**1. ஒல்ரனேறியா வெளிறல்**

ஆரம்பத்தில் கரட் இலைகளில், பெரும்பாலும் இலைகளின் ஓரத்தில் மஞ்சள் விளிம்பைக்கொண்ட கருங்கபிலம் முதல் கறுப்புப் புள்ளிகள் தோன்றும். தாக்கத்தின் இறுதியில் இலை முற்றாக இறந்து குறுக ஆரம்பிக்கும். ஈரக்கால நிலையில் இந்தச் சேதம் பனியினால் ஏற்பட்ட சேதம்போன்று இருக்கும். இலைக்காம்புகளில் புள்ளிகள் ஏற்படும்போது முழு இலையும் இறக்கும். சிலவேளைகளில் புள்ளிகள் இலைகளில் தோன்றாது. காம்புகளில் மட்டும் தோன்றும்.

இளம் பருவத்தில் இந்த நோய் ஏற்படும்போது, பயிர்கள் அடியழுகுதல் நோய்க்கு உட்படும் அத்துடன் வேர்களும் அழுகக் கறுப்புநிறமாக மாறும். இந்த நோய்க்காரணியின் வித்திகள் ஓடும் நீர், சிதறும் மழை நீர், தொற்றிய மண், நோயுள்ள இடங்களில் பயன்படுத்திய உபகரணங்கள் போன்றவற்றினால் பரவுகிறது. கடும் மழை, கடும் பனி என்பன இந்த நோய் ஏற்படுவதற்குச் சாதகமாக அமையும்.

சிறந்த வடிகால், இந்த நோய் ஏற்படக்கூடிய சூழலைக் குறைக்கும். டகோனில் அல்லது டெக்சினெக்ஸ் மருந்தில் ½ கிலோ கிராம் 4000 மீற்றர் வீதம் 7 நாட்களுக்கு ஒருமுறை விசிறுவதனால் இந்த நோயைக் கட்டுப்படுத்தலாம்.

**2. செக்ஸ்போரா இலை வெளிறல்**

இதன் அறிகுறி ஒல்ரனேறியா வெளிறல் போன்றே இருக்கும். ஆனால் புள்ளிகள் முட்டை வடிவமாகவும், கடும் ஓரத்தை உடையதாகவும் இருக்கும். கட்டுப்படுத்தும் முறை ஒல்ரனேறியா வெளிறல் போன்றதே.

**3. பக்ரீரியா வெளிறல், வேர் 'ஸ்காப்'**

இந்த நோய்கள் பக்றீரியாக்களினால் ஏற்படுகின்றன. ஆரம்பத்தில் மஞ்சள் நிறமாகக் காணப்படும் புள்ளிகளின் மத்தியபகுதி படிப்படியாகக் காய்ந்து மென்மையாக மாறும். இவை நாளடைவில் ஒழுங்கற்ற கபிலப்புள்ளிகளாகக் காணப்படும்.

காம்புகளிலும், தண்டுகளிலும், கருங்கபிலநிறக் கோடுகளும் தோன்றும். சிலவேளைகளில் தண்டுகளிலும், காம்புகளிலுமிருந்து ஒட்டுத்தன்மையுள்ள பக்றீரியாத் திரவம் வடியும். வேர்களில் கபிலம் முதல் கருமை நிறமான தழும்புகள் தோன்றி, பின் அவை கட்டிகளாக அல்லது மத்தியில் இறந்த கலங்களைக் கொண்ட பள்ளமான பகுதிகளாக மாறும். சில வேளைகளில் இவை வெடிப்பதால், பக்றீரியாத் திரவம் வெளியேறும். இந்தத் தழும்புகள் ஒன்று சேரும்போது பெரிய தாழ்ந்த பகுதிகளைக் கொண்ட கட்டிகள் உருவாகும்.

இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு கரட் பயிரை அதே நிலப்பகுதியில் குறைந்தது இரு வருடங்களுக்காவது பயிரிடுதல் கூடாது.

நோய் தொற்றிய விதைகளிலிருந்து இந்த நோய் ஏற்படக் கூடுமாகையால், நம்பகரமான இடங்களிலிருந்து விதைகளைப் பெறவேண்டும்.

கரட்டில் முள்வேர், வெடித்தவேர் போன்ற குறைபாடுகளையும் அவதானிக்கலாம். முள்வேர் ஏற்படுவதற்கு நிலத்தில் காணப்படும் தடைகளும், வேர் நுனிகளுக்கு ஏற்படும் சேதமும் காரணமாகும். வெடித்தவேர் ஏற்படுவதற்கு மேலதிக முதிர்ச்சி, பிழையான நீர்ப்பாசனம், நீண்டகால வரட்சிக்குப்பின் பெய்யும் மழை போன்றனவே காரணமாகும்.

சூரியஒளி விடுவதாலேயே வேரின் மேற்பகுதி பச்சை நிறமாக மாறுகிறது.

**அறுவடை**

கேப் மாக்கட் இனத்தை அறுவடை செய்வதற்கு 3½ மாதங்கள் செல்லும். அதேநேரம், ரெப் வெயிட் இனம் அறுடை செய்வதற்கு 4½ மாதங்கள் செல்லும். பயிர்கள் மேலதிகமாக முதிரும்போது வேர் வெடித்தலும், நார்த்தன்மை அடைதலும் ஏற்படும்.

விளைச்சல் 4000 சதுர மீற்றருக்கு 10 - 15 தொன் கிடைக்கும். (முற்றும்)

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 15/= | 20/= | 30/= | 15/= | 15/= | 15/= |
| வெண்டிக்காய் | 10/= | 15/= | 20/= | 10/= | 10/= | 25/= |
| உருளைக்கிழங்கு | 60/= | 65/= | 70/= | 70/= | 60/= | 80/= |
| கத்தரிக்காய் | 15/= | 15/= | 25/= | 15/= | 20/= | 30/= |
| பாகற்காய் | 40/= | 50/= | 60/= | 30/= | 30/= | 35/= |
| கரட் | 40/= | 25/= | 30/= | 20/= | 30/= | 50/= |
| பீற்றூட் | 15/= | 15/= | 25/= | 10/= | 20/= | 20/= |
| முருங்கைக்காய் | 250/= | 150/= | 200/= | 300/= | 250/= | 200/= |
| வெங்காயம் | 35/= | 30/= | 40/= | 30/= | 30/= | 40/= |
| பச்சை மிளகாய் | 40/= | 50/= | 60/= | 30/= | 30/= | 35/= |

தொழில்மலர்

# ஒற்றுமையை விளைவிப்பது ஒருங்கிணைப்பு

பல செயற்பாடுகளை ஒன்றிணைப்பதே ஒருங்கிணைப்பாகும். தனி மனித முயற்சிகள் ஒன்றுபட்டுச் செயற்படும்போது, அவை வெற்றியை விளைவிக்கின்றன. ஊர் கூடித் தேர் இழுக்கும்போது, தான் தேர் நகருகிறது. இந்த ஒற்றுமையை விளைவிப்பது தான் ஒருங்கிணைப்பு.

ஒரு பெரிய நிறுவனத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். அவர்கள் சிறு சிறு குழுக்களாகச் செயற்படுகின்றனர். அவர்களுடைய செயற்பாடுகள் ஒருங்கிணைக்கப்படும் போதுதான் உற்பத்தி முழுமை பெறுகிறது.

மனித உடலையே எடுத்துக்கொள்வோம். அது 206 எலும்புகளையும், 620 தசைகளையும் கொண்டது. குருதி ஓட்டம், உணவுச் சமிபாடு, மூச்சு இயக்கம், சுரப்பிகளின் இயக்கம், நரம்புகளின் இயக்கம் ஆகியவை ஒருங்கிணைந்து செயற்படும் போதுதான் மனித இயக்கம் இடம்பெறுகிறது. இந்த ஒருங்கிணைப்பு இல்லையென்றால் மனிதனின் இயக்கம் தடைப்படும். நிறுவனமும் இதைப் போன்றதுதான்.

இசையரங்கை ஒருங்கிணைப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் குறிப்பிடுவார்கள். ஒரு இசையரங்கில் பாடகருடன் சேர்ந்து பல்வேறு இசைக்கருவிகளையும் இசைக்கின்றனர்.

பாடகர் எப்போது பாடவேண்டும், மத்தளம் எப்போது ஒலிக்க வேண்டும், ஊது கருவிகள் எப்போது இயக்கப்படவேண்டும் என்பதை இசை இயக்குநர் முடிவு செய்து இயக்குகிறார். இவர்களிடையே ஒருங்கிணைப்பு ஏற்படும்போது, இன்னிசை பிறக்கிறது. ஒருங்கிணைப்பு இல்லையென்றால் இசை இருக்காது. ஓசைதான் இருக்கும்.

இரு இசைக்கலைஞர்களின் இன்னிசையில் ஒருவருடையதைச் சிறந்தது என்று எதை வைத்துக் கூறுகிறோம்?

இசையில் லயம் இருக்கவேண்டும். தாளத்தில் கட்டு இருக்கவேண்டும். அப்போதுதான் அதைச் சிறந்தது என்று கூறுகிறோம். இதே லயத்தையும், கட்டுப்பாட்டையும் ஒரு நிறுவனம் கொண்டிருக்குமென்றால் அது சிறந்த விளைவுகளை ஏற்படுத்த முடியும். ஒருங்கிணைப்புதான் அதற்குச் சிறந்த வழி.

ஒரு நிறுவனத்தில் பல்வேறு துறைகளும், பிரிவுகளும் தனித்து இயங்கினாலும் அவை ஒன்றை ஒன்று சார்ந்தே இயங்குகின்றன. உற்பத்தித்துறை - கொள்வனவுத் துறையையும், கொள்வனவுத் துறை - நிதித்துறையையும், நிதித்துறை - விற்பனைத்துறையையும், விற்பனைத் துறை - உற்பத்தித்துறையையும் சார்ந்து இயங்குகின்றன.

அனைத்துத் துறைகளுமே பணியாளர் துறையைச் சார்ந்து இயங்குகின்றன. இந்தத் துறைகள் மற்றைய ஒத்துழைப்பை நாடி நிற்கின்றன. அனைத்துத் துறைகளுமே நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகத்தான் செயற்படுகின்றன. எனினும், அவற்றின் இயக்கங்களில் ஒருங்கிணைப்பு இருந்தால், கால விரயமும், பணவிரயமும் தவிர்க்கப்படும்.

எடுத்துக் காட்டான ஊர்திகள் பாராமரிப்பை எடுத்துக் கொள்வோம். அனைத்துத் துறைகளுக்குமே ஊர்திகளின் தேவை இருக்கிறது. கொள்வனவுத்துறை மூலப் பொருட்களைத் தொழிற்சாலைக்குக் கொண்டுவந்தவர்களை தொழிற்சாலைக்குக் கொண்டு வந்து சேர்க்க ஊர்தி தேவைப் படுகிறது.

விற்பனைத் துறைசரக்குகளை அனுப்புவதற்கு ஊர்தியைக் கோரு கின்றது. ஊர்தி போகும்போது சரக்குகளை ஏற்றிக்கொண்டு, திரும்பும்போது கொள்வனவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டும் வந்தால் செலவு மிச்சமாகும். இத்தகைய ஒருங்கிணைப்புக்கு இரு துறைகளும் இசைந்தும், இணைந்தும் செயற்பட வேண்டும் செயற்பாடுகளில் உரசலோ, மோதலோ நேராமல் தவிர்ப்பது மேலாளர்களின் கடமையாகும். நிறுவன நலன் பாதுகாக்கப்படுவதற்கு அனைவரும் ஒத்துழைத்தாகவேண்டும்.

ஒரு விளையாட்டு அணியில் பல ஆட்டக்காரர்கள் இருந்தாலும், ஒருவரின் இயக்கம் அடுத்தவருக்கு உதவுவதாக இருந்தால் தான் அணி வெற்றியை அடையமுடியும்.

இதே நியதிதான் நிறுவன வெற்றிக்கும் அடிப்படையாய் அமைகின்றது. நிறுவனத்தில் ஒவ்வொருவரும் அடுத்தவரின் பணிக்கு உதவ வேண்டும், ஒத்துழைக்க வேண்டும் அப்போதுதான் நிறுவனம் வெற்றிகரமாக இயங்கமுடியும்.

ஒருங்கிணைப்புக்கு நல்ல தலைமை வேண்டும். தகவல் தொடர்பு முறைகள் சிறந்தனவாக இருத்தல் வேண்டும்.

அதிகாரப் பகிர்வு வேண்டும். கட்டுப்பாடும் வேண்டும். திட்டங்கள் உருவாக்கப் படும்போது அவற்றில் அனைவரின் பங்களிப்பும் இருக்க வேண்டும்.



தாங்களே இசைவளித்த திட்டங் களுக்கு அனைவரின் ஒத்துழைப்பும் இலகுவாகக் கிடைக்கும்.

ஒருங்கிணைப்பு இல்லாத நிறுவனங்களில் எவ்வளவு வளங்கள் இருந்தாலும் அவை வீணாகும். நிறுவன நலன் புறக்கணிக்கப்படும். அசட்டையும் ஒதுங்கி நிற்கும் மனநிலையும் காணப்படும். உற்பத்தித்திறன் குறையும்.

எனவே மேலாளரானவர் சிறந்த ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட வேண்டும். அடிக்கடி குழுக்கூட்டங்கள் நடத்தி, அனைவரின் கருத்துக்களையும் கேட்டறிய வேண்டும். குறைகளைக் கேட்டு அவற்றை நீக்க வேண்டும்.

உடன் பணியாற்றுவோரின் தேவைகளை அறிந்து, அவற்றுக்கு உதவ வேண்டும். நிறுவனத்தின் குறிக்கோள்களை நோக்கி அனைவரையும் வழி நடத்திச் செல்லவேண்டும்.

மேலாளரின் முதன்மைப் பணி ஒருங்கிணைப்பேயாகும்.

எனவே ஒருங்கிணைப்பைத் திட்டமிட்டுச் செயற்படுத்தினால், விளைவுகள் பன்மடங்கு பெருகும்.

குழுவொடுக்கமும் உயர்ந்த விளங்கும்.

சுயதொழில்

# பதநீரிலிருந்து உணவுப் பொருட்கள் தயாரித்தல்

பனைதரும் பதநீரிலிருந்து பல்வேறு வகையான உணவுப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இது மருந்தாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

பனம்பாகு, பனைவெல்லம் (பனங்கட்டி), பனம்சீனி, பனங்கற்கண்டு போன்றவை பதநீரிலிருந்து பெறப்படும் பொருட்களாகும். பதநீர் பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்களிலேயே கிடைக்கின்றன. இந்தப் பதநீரைப் பனம்பாகு (பனம்பாணி) ஆக மாற்றுவதன் மூலம், நீண்ட காலத்துக்குப் பயன்படுத்த முடியும்.

மக்களின் தேவைகளை ஈடுசெய்யுமளவுக்குப் பதநீர் உற்பத்தியோ, அதிலிருந்து பெறப்படும் உணவுப்பொருள் உற்பத்தியோ இதுகாலவரை மேற்கொள்ளப்படவில்லை. குறுகிய காலப் பயிற்சியுடன் அல்லது அனுபவத்துடன் இந்தத் தொழிலில் ஈடுபடலாம்.



**மூலப் பொருள் - பதநீர்**

*உபகரணங்கள்* - தாச்சிச்சட்டி அல்லது பானை, அகப்பை, துடைப்பம், வடிகலன்.

**பதநீரிலிருந்து உணவுப்பொருட்கள் செய்முறை**

பதநீரை உணவுப் பதார்த்தமாக்குவதற்கு முன்னர், அதிலுள்ள சுண்ணாம்பை அகற்ற வேண்டும்.

இதற்கு பி.எச்.தாளைப்பயன்படுத்தலாம்; பதநீரை $40^\circ$ சென்டி கிரேட்டுக்கு வெப்பமேற்றி, பி.எச். பெறுமானம் 7.5 ஆக வரும் வரை பொசுபோரிக் அமிலம் கலக்கவேண்டும். பின்னர் $90^\circ$ சென்டி கிரேட் - $98^\circ$ சென்டி கிரேட் ஆகும்வரை பதநீரைச் சூடாக்கி, 30 நிமிடங்கள் ஆறவிடவேண்டும்.

அப்போது சுண்ணாம்புப் பாத்திரத்தின் அடியில் மண்டியாகப் படிந்திருக்கும். தெளிந்த பதநீரை வடித்தெடுத்து, சுண்ணாம்பு மண்டியை அகற்றவேண்டும்.

1. பனம் பாகு (பனம் பாணி)

பதநீரை சுண்ணாம்பு அகற்றிய பின் $105^\circ$ சென்டிகிரேட் - $107^\circ$ சென்டிகிரேட் வரை சூடாக்க வேண்டும். அப்பொழுது பனம்பாகு கிடைக்கிறது. இதைப் போத்தல்களில் அடைத்து நீண்டகாலத்துக்குச் சேமித்து வைக்கலாம். தயிர், அப்பம், பிட்டு ஆகிய உணவுவகைகளுடன் கலந்து உட்கொள்ளலாம்.

2. பனைவெல்லம் (பனங்கட்டி)

பதநீரின் கொதிநிலை $116^\circ$ சென்டிகிரேட் - $118^\circ$ சென்டிகிரேட் ஆக இருக்கும்போது, அது பொன்மஞ்சள் நிறமாக மாறும். அதை அடுப்பிலிருந்து இறக்கி, சட்டகப்பையால் நன்கு கடைய வேண்டும். பாகு வெப்பம் ஆறும்போது இறுகிவரும். அப்போது அதை வேண்டிய அச்சுக்களில் ஊற்றி ஆறவிடும்போது, பனை வெல்லம் ஆகிறது.

3. பனங்கற்கண்டு

பதநீரை $108^\circ$ சென்டிகிரேட் - $112^\circ$ சென்டிகிரேட் வரை வெப்பமேற்ற வேண்டும். பின் U வடிவிலான கற்கண்டை பாத்திரத்துக்கு மாற்றவேண்டும். தொட்டியை அசையாமல் பாதுகாக்கவேண்டும். சில நாட்களில் கற்கண்டு கொத்துக் கொத்தாக விளைந்திருக்கும். இந்தக் கற்கண்டைத் தூயநீரில் கழுவி காயவைத்துப் பேணிப் பாதுகாக்கலாம்.

# மரபணுச் சோதனைமூலம் குழந்தைகளின் தந்தைமார் அடையாளம் காணப்பட்டனர்!

நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையர்கள் யார் என்பது தொடர்பான வழக்கு - கடந்த திங்கட்கிழமை வவுனியா நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

அறிவிக்கப்பட்ட தீர்ப்பின்படி, குறிப்பிட்ட இரண்டு குழந்தைகளின் தந்தையர்கள் தாமில்லையென இதுவரை வாதாடி வந்தவர்களே, குழந்தைகளின் உண்மையான தந்தை யார்ரென மரபணு பரிசோதனைகள் உறுதிப்படுத்தியுள்ளன.

வவுனியா நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற தாபரிப்பு வழக்குகளில் 4 இளம் பெண்கள் தமது பிள்ளைகளுக்கு இவர்கள் தான் தந்தையர் என, 4 இளைஞர்களை இனம்காட்டிய போது, அவர்கள் அந்த நான்கு பிள்ளைகளும் தமது பிள்ளைகள் இல்லையென மறுத்து வந்தனர்.

இது தொடர்பான வழக்கில் 4 பெண்களையும், அவர்களின் பிள்ளைகள் 4 பேரையும், தந்தையர்கள் எனக் குற்றம் சுமத்தப்பட்ட 4 இளைஞர்களையும் டி.என்.ஏ பரிசோதனைக்கு உட்படுத்துமாறும், இதற்கான ஒழுங்குகளை சட்டத்தரணி நடராஜா சுதர்சனை மேற்கொள்ளுமாறும் நீதிபதி பணித்திருந்தார்.

இதன்படி, கொழும்பிலுள்ள வைத்திய நிபுணர்களான மாயா குணசேகரா, ஆர்.ரணவக்க ஆகியோர் டி.என்.ஏ பரிசோதனைகளை மேற்கொண்டு, மருத்துவ அறிக்கை வவுனியா நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு, வழக்கு நீதிமன்றில் கடந்த திங்கட்கிழமை விசாரணை செய்யப்பட்டு, தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

கடந்ததிங்கட்கிழமை இந்த டி.என்.ஏ. பரிசோதனை அறிக்கையின் மூலமும், சாட்சியங்களின் மூலமும் அளிக்கப்பட்ட தீர்ப்பின்படி ஜேம்ஸ் செல்வி (வயது 26) கடந்த ஜீன் மாதம் 26 ஆம் திகதி வவுனியா வைத்திய சாலையில் பெற்றெடுத்த ஆண் குழந்தையின் தந்தை இலுப்பைக்குளம் - நேரியகுளம் பிரதேசத்தைச் சேர்ந்த இமானுவேல் ஸ்ரீபன் (வயது 26) என இனங்காணப்பட்டார்.

இவர் மேற்படி பெண் செலவழித்த பணம் ரூபா 84 ஆயிரமும், மாதாந்தம் 3 ஆயிரத்து 500 ரூபாவும் மேற்படி பெண்ணுக்கு செலுத்தவேண்டும் என நீதிவான் தீர்ப்பளித்தார்.

வவுனியா பிரதேசத்தை சேர்ந்த சுபாங்கினி (வயது 24) கடந்த 2000 ஆண்டு ஜீன் மாதம் 29 ஆம் திகதி வவுனியா வைத்தியசாலையில் பெற்றெடுத்த குழந்தைக்கு, வவுனியா கல்மடுப் பிரதேசத்தைச் சேர்ந்த சிவராஜா ஜீவசீலன் (வயது 27) என்பவர் தந்தை என இனங்காணப்பட்டார். இவர் மேற்படி பெண்ணுக்கு அவர் செலவழித்த 24 ஆயிரம் ரூபா பணமும், மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா பணமும் செலுத்தவேண்டும் என நீதிவான் தீர்ப்பளித்தார்.

தந்தையர்கள் இவர்கள் தான் என உறுதிப்படுத்தப்பட்டபின்னர் குறிப்பிட்ட இரண்டு பிள்ளைகளுக்கும் பிறப்புச் சான்றிதழை உரிய முறைப்படி பெற்று வழங்குமாறும் நீதிபதி எம். இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

ஏனைய இருவரது தாபரிப்பு வழங்குகளும் டி.என்.ஏ. பரிசோதனை மூலமும், சாட்சியங்கள் மூலமும் உறுதிப்படுத்தப்படாமையால், குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர். (03)




## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### மார்ச் - 31

1892 : கைரேகைப் பதிவுத்துறை ஆரம்பித்து வைக்கப்பட்டது. குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் நோக்கோடு போனஸ் அயர்சில் சான் நிக்கோலாஸ் என்ற இடத்தில் ஜீவான் பூ செடிக் என்பவரால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

1941 : போர் ஆயுதங்கள் தாங்கிய ஜேர்மனியின் முதலாவது வர்த்தகக் கப்பல் கடலோட ஆரம்பித்தது. இது இன்னும் ஏழு கப்பல்களுடன் சேர்ந்து, இந்த வருடத்தில் மட்டும் 87 பிரிட்டிஷ் வர்த்தகக் கப்பல்களை மூழ்கடித்தமை குறிப்பிடத்தக்கது.

1949 : கனடாவின் பத்தாவது மாநிலமாக பொதுமக்களது கருத்துக் கணிப்பின்படி நியூபவுண்லாந்து இணைந்து கொண்டது.

1966 : நிலாவை நோக்கி ரஸ்யாவால் லூனா - 10 என்ற விண்கலம் ஏவப்பட்டது.

1982 : இந்தியாவில் முதன் முதல் இணைக்கப்பட்ட "ஜாக்குவார்" விமானத்தின் வெள்ளோட்டம் பெங்களூரில் நடைபெற்றது.

1989 : அகமதாபாத்தைச் சேர்ந்த ஜெயப்பிரகாஸ் ஜானி என்ற ஆயுள் காப்புறுதி அதிகாரி, 5 கோடி ரூபா பெறுமதியான 835 ஆயுள் காப்புறுதி விண்ணப்பங்களை ஒரே நாளில் மட்டும் பதிவு செய்து, உலக சாதனையை ஏற்படுத்தினார்.

1991 : ஜோர்ஜியா சுதந்திரம் பெற்றது.

தொகுப்பு - சந்துரு

## பாதுகாப்பான இடங்களில் நிரந்தர குடியிருப்புகள்

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு, நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கும் அதே வேளை, வடமராட்சி கிழக்கிலுள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் பாதுகாப்பான இடங்களில் நிரந்தர குடியிருப்புக்கள் அமைக்கும் ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன. (21)

## கல்விசார் ஊழியர்களுக்கான வருடாந்த ஒன்றுகூடல்

மன்னாரில் கல்விசார் ஊழியர்களுக்கான வருடாந்த ஒன்றுகூடல் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

மன்னார் வலயக் கல்வி அலுவலகத்தில் மன்னார் மாவட்ட கல்வி மேம்பாட்டு பேரவைத் தலைவர் ஜெக்கப் தலைமையில் இடம்பெற்ற இந்த வருடாந்த ஒன்றுகூடலில், தமிழீழ கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் அருண்மாஸ்ரர், மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன், மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம், மன்னார் மற்றும் மடு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## முள்ளியான் மருந்தகம், வைத்திய விடுதியை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை

கடந்தகால போர் அனர்த்தங்களின் போது முள்ளியான் மத்திய மருந்தகம், வைத்தியர் தங்கும் விடுதி என்பன முற்றுமுழுதாக அழிக்கப்பட்டுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்பின் மீளக்குடியமர்ந்த வெற்றிலைக் கேணி, முள்ளியான், போக்கறுப்பு, சுண்டிக்குளம் கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள மக்களும், பருவகால மீன்பிடித் தொழிலுக்கு வரும் பிற மாவட்ட கடற்றொழிலாளர்களும் வைத்தியசேவையைப் பெறுவதில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னும், இப்போதும் கூட 9 கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஆழியவளை திலீபன் மருத்துவமனை, 17 கிலோமீற்றர் தூரத்திலுள்ள மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை ஆகியவற்றுக்குச் சென்றே வைத்திய சேவையைப் பெறுகின்றனர்.

இந்தப் பகுதியிலுள்ள வீதிகள் சுனாமி அனர்த்தத்தின் போது மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் மக்கள் கால்நடையாகச் சென்றே வைத்தியசிகிச்சையைப் பெறுகின்றனர்.

ஆகவே அந்தப் பிரதேச மக்களின் நலன்கருதி முற்றாக அழிக்கப்பட்ட முள்ளியான் மத்திய மருந்தகத்தையும், வைத்தியர் தங்கும் விடுதியையும் இந்தப் பிரதேசத்தின் மையப்பகுதியில் அமைத்துள்ளதும், குடிசனம் கூடுதலாக உள்ளதுமான கட்டைக்காடு கிராமத்தில் அமைத்துத் தரும்படி அண்மையில் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கு வருகைதந்த யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனிடம் இந்தப் பகுதி பொது அமைப்புகளும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (21)

## முல்லைத்தீவு - மல்லாவிப் பிரதேசத்தில் பொது நோக்கு மண்டபம் திறந்துவைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - மல்லாவிப் பிரதேசத்தில் பூவரசங்குளக் கிராமத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடனும் - நிகொட்திட்டத்தின் அனுசரணையுடனும், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பாண்டியன்குளம், துணுக்காய் அபிவிருத்தி நிறுவனத்தினரால் நிறுவப்பட்ட பொது நோக்கு மண்டபம் திறந்துவைக்கப்பட்டது.

திறப்புவிழா நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கத் தலைவர் மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் புனிதன் ஏற்றிவைத்தார். மங்கள விளக்கை பூவரசங்குளக் கிராம அலுவலர் பொன்னுத்துரை, தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிகொட்திட்ட சமூக உணர்வூட்டாளர் ரூபா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றிவைத்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் ராமமூர்த்தி ஏற்றிவைத்தார். பாண்டியன்குளம், துணுக்காய் அபிவிருத்தி நிறுவனக் கொடியை அதன் நிர்வாக அலுவலர் மைதிலி ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் நடராஜா நிகழ்த்தினார். ஆசியுரையை முல்லைத்தீவு மாவட்ட திட்ட இணைப்பாளர் பரமானந்தம் நிகழ்த்தினார். சிறப்புரைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் றீகன், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

திறப்பு விழா நிகழ்வில் பூவரசம்குளக் கிராமமக்கள், போராளிகள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இந்தப் பொது நோக்கு மண்டபம் பூவரசங்குள கிராமமக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.




முல்லைத்தீவு - மல்லாவி பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபத் திறப்பு விழாவில் - பொதுச்சுடரை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் புனிதன் ஏற்றுவதை முதலாவது படத்திலும், பெயர் பலகையை கிராம அலுவலகர் பொன்னுத்துரை திரைநீக்கம் செய்துவைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## புனரமைக்கப்படாத நிலையில் வடமராட்சி கிழக்கு கடற்கரை வீதி

(வடமராட்சி)

அண்மையில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பு காரணமாகவும், தற்காலிக குடியிருப்புகள் அமைப்பதற்குரிய பொருட்கள் லொறிமூலம் கொண்டுவரப்பட்டதாலும், வடமராட்சி கிழக்குப் பிரதேச கிராமங்களிலுள்ள கடற்கரை வீதி உட்பட அனைத்து களி மண், கிறவல் வீதிகளும் முற்றாகப் பழுதடைந்து வாகனங்கள் செல்ல முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வீதியை திருத்துமாறு யாழ்.மாவட்ட அரச செயலகத்தில் இடம்பெற்ற சுனாமி கடல் அனர்த்த கடற்றொழில் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வடமராட்சி கிழக்குப் பிரதேச பொது அமைப்புகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதிகள் வீதி அதிகார சபையினராலும், குறுக்குவீதிகள் பருத்தித்துறை பிரதேச சபையினராலும் திருத்தம் செய்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அரசாங்க அதிபர் தெரிவித்தார். (21)

## வவுனியா நகரில் சுவரொட்டிகள்!

(வவுனியா)

வவுனியாவில் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுவோர் தண்டிக்கப்படுவர் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

சீர்திருத்தக் குழு என்ற பெயரில் வவுனியாவில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் எதிர்வரும் 15 நாட்களுக்குள் அவற்றை நிறுத்திக் கொள்ளவேண்டும் என சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்களிடம் முறைகேடாக நடந்துகொள்பவர்கள், பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவோர், அரைகுறை ஆடை அணிவோர் என்பவர்களே குறிப்பிட்ட சீர்திருத்தக் குழுவினால் எச்சரிக்கப்பட்டவர்களாவர்

## சந்திப்பு

வவுனியா மாவட்ட வர்த்தக, கைத்தொழில் சம்மேளனத்தின் அங்கத்தவர்களுக்கும், எப்.சீ.சீ.ஐ.எஸ்.எல் செயலாளர்நாயகம் சுமந்த அபயவிக்கிரமவுக்கும் இடையிலான சந்திப்பு நாளைமறுதினம் மாலை 4.30 மணிக்கு நெல்லி ஸ்ரார் ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வியாபாரக் கல்லூரி சம்பந்தமான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவுள்ளது. (03)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.
திருக்குறள்

# நமது நோக்கு

## அரசன் எவ்வழியோ நாடும் அவ்வழியே

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத்து ஓராண்டை ஒரு மாதிரியாகத் தள்ளாடித் தள்ளாடிக் கடக்க முயலும் நிலையில், ஒரு அரசு என்ற வகையில் எந்த விதமான உருப்படியான பணியையும் அது செய்யவில்லை என்பது ஒருபுறமிருக்க, 'உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன்' என்ற பழமொழிக்கேற்ப அது ஆட்சிக்கு வருமுன் நாட்டில் நிலவிய ஒரு தற்காலிகமான அமைதி நிலையை அழித்துவிட்டுள்ளதுடன், சமாதானம் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக கொஞ்சநஞ்சமிருந்த நம்பிக்கையையும் தொலைந்துபோகச் செய்துள்ளது என்றால் அது உண்மையேயாகும்.

முன்னர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் - போருக்கு முன்னுரிமை கொடுத்து நாட்டின் பாதுகாப்பு என்ற 'பம்மாத்து' வார்த்தையைப் பயன்படுத்தி, அவசரகாலச் சட்டத்தின் கீழ் இரத்த வாடையும், அவலக்குரலும் நிறைந்த சர்வாதிகாரரீதியிலான அடக்குமுறை அரசாங்கத்தை ஏழாண்டுகாலம் நடத்தி - அச்சமும், பீதியும் நிறைந்த வாழ்க்கையை மட்டுமே மக்களுக்கு வழங்கிய ஜனாதிபதியை - 2002 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மக்கள் நிராகரித்து பொ.ஐ.முன்னணியை தோல்விடைய வைத்தபோது அந்த ஆட்சி மீதான மக்களின் அதிருப்தி வெளிப்பட்டது.

அதனையடுத்து பதவிக்குவந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசு மக்களுக்கு ஆரம்பத்தில் அதீத நம்பிக்கையை ஏற்படுத்தியபோதும் - சமாதான முயற்சிகளில் அதன் முடிவெடுக்கும் அதிகாரமற்ற நிலையும், ஸ்திரமற்ற கொள்கை நிலைப்பாடும் ஆக்கபூர்வமாக பல காரியங்களைச் செய்யக்கூடிய வாய்ப்பும், சர்வதேச பின்புலமும், அமைதிச் சூழலும் இருந்தும் எதையுமே செய்யாமல், எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் கேள்விக்குறி நிலையிலேயே நிறுத்திவிட்டு ஜனாதிபதியின் அதிகாரபலத்துக்கு முன் ஆட்சியிழந்து போயிற்று.

எனினும், அது ஆட்சிப் பொறுப்பிலிருந்த இரண்டாண்டு காலப்பகுதிக்குள் விடுதலைப் புலிகள் சமாதானத்திற்கான சமிக்ஞையாக ஒருதலைப் பட்சமாக அறிவித்த யுத்தநிறுத்தத்தை இறுகப் பற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் இருந்ததால் பல்வேறுபட்ட அழுத்தங்களுக்கிடையிலும் அதனைப் பாதுகாக்க முயன்றதுடன் நோர்வே அனுசரணையுடனான சமாதானப் பேச்சுக்களையும் முழுக்க முழுக்க விசுவாசத்துடன் அல்லாவிட்டாலும் முன்னெடுத்தது என்றே கூறலாம்.

ஆனால், ஜனாதிபதி அத்தகையதோர் அமைதிநிலை தனக்கும், தனது அரசியல் எதிர்காலம் குறித்த கனவுகளுக்கும் ஆபத்தாக அமையும் எனப் பயந்ததால் ரணிலின் ஆட்சிக்கு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி முற்றுப்புள் ளியை வைத்தாலும், சமாதானச்சூழலை நிர்மூலமாக்க சர்வதேச சமூகம் அவரை அனுமதிப்பதாக இல்லை என்பதால் அது இன்னமும் இழுபறிநிலையிலும் தொடரவே செய்கிறது.

இது ஜனாதிபதி எதிர்பார்த்திராத ஒன்று மட்டுமல்ல, அவரால் நிராகரிக்க முடியாத ஒன்றுமாகும்.

மீண்டும் அவரது கட்சிக்கு ஆட்சியுரிமையை மக்கள் அளித்தாலும்கூட, அவரால் எதனையும் (தனது அதிகாரததைப் பயன்படுத்திக்கூட) சுயாதீனமாகச் செயற்படுத்த முடியாத நிலையை அவரது ஆட்சிப் பங்காளிகளான ஜே.வி.பியினர் ஏற்படுத்திவிட்டதால் - இந்த ஆட்சி தனது ஓராண்டு காலத்தைச் செயற்திறனற்று - முரண்பாடுகளுடன் முட்டி மோதிக்கொண்டும் வெறும் அறிக்கைகளையும், மறுப்பறிக்கைகளையும் விடுத்துக்கொண்டும் கழித்துள்ளதுடன் சமாதான முயற்சிகளுக்கும் சாவுமணியடிக்கும் செயற்பாடுகளலேயே முனைப்புக்கொண்டுள்ளதெனலாம்.

சமாதானம் - சுனாமி ஆகிய இரண்டாலும் நிவாரணம் புனர்நிர்மாணம் போன்றவற்றின் பெயரால் நிதியை சர்வதேச சமூகத்திடம் அள்ளிக்கொள்ள நினைத்த அரசின் நேர்மையின்மை அவற்றைக்கூட முழுமையாகப் பெற்றுக் கொள்ளமுடியாத நிலையை அதற்கு உருவாக்கியுள்ளது.

ஏறும் விலைவாசியை இறக்க மார்க்கம் தெரியாத அரசு மக்கள்மீது வரிச்சுமைகளை ஏற்றத்தொடங்கியுள்ளது.

மாவிற்கான மானிய நிறுத்தம் சாதாரண மக்களின் அடிவயிற்றிலேயே தாக்கியுள்ளது.

எரிபொருட்களின் விலை ஏறிக்கொண்டேபோகிறது. மின் கட்டணம், பஸ் கட்டணம் மேலும் உயரப்போவதற்கான சமிக்ஞைகள் தெரிகின்றன. நீர்க்கட்டணம் ஏறிவிட்டது. பெரும்பாலான அத்தியாவசியப் பொருட்களின் விலை 30 சதவீதத்தால் அதிகரித்துவிட்டது.

இவை மேலும் அதிகரிக்கவே செய்யும்.


இதனைத்தடுக்க 'வங்குரோத்து' நிலையில் உள்ள இந்த அரசால் முடியவே முடியாது.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்ள பொதுக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்தவே பொறுப்பற்ற முறையில் காலம்கடத்தும் அரசு - மக்களின் நலனில் எத்தகைய அக்கறைக் கொண்டிருக்கும் என்பது விபரிக்கவேண்டிய ஒன்றல்ல.

போரிலும், சமாதானத்திலும், இயற்கை அனர்த்தத்திலும் கூட தனது அரசியல் நலனைப் பேண நினைக்கும் அரசும் ஆட்சித் தலைமைகளும் இந்த நாட்டையும் மக்களையும் என்ன செய்யப்போகின்றதோ?

அவர்களுக்கு மட்டுமே வெளிச்சம்.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# வேங்கைப் படை கண்டு உளம்விண்டு ஆனந்தக் கண்ணீர் விடும் தந்தை!

"நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்வீர் என்று
கேட்டு
விடுதலை தவறிக்கெட்டு
பாழ்பட்டு நின்ற தாமோர்..."

ஈழதேச மக்களுக்கு அவர்களின் உரிமைகளை எடுத்துக்கூறி அவற்றை வெல்வதற்குப் போராடத் தூண்டி அதற்குத் தலைமையுந் தாங்கி வழிகாட்டிய தந்தை செல்வாவின் பிறந்த தினம் இன்று.

வெள்ளையர் வெளியேறியபின் இந்த நாட்டு மக் கள் அனைவரும் சுதந்திரத்தை அனுபவிக்கலாம் என்றிருந்த போது வெளியேறிய வெள்ளையருக்குப் பின் நாங்கள் தான் உங்கள் எஜமான்கள் என்று சிங்கள - பௌத்த மேலாண்மை தலையெடுத்து நின்றது.

இதைத் தட்டிக்கேட்க முற்பட்ட தமிழ்த் தலைவர்களைத் தங்கள் பக்கம் வளைத்துப் போட்டது. ஆனால் தமிழ் மக்களின் உரிமைகள் படிப்படியாக பறிக்கப்பட்டன. இதுமட்டுமல்ல - தமிழ் மக்களின் மண்ணும் கொஞ்சம் கொஞ்சமாக அபகரிக்கப்பட்டது. இன்றும் அபகரிக்கப்பட்டு வருகிறது. இவற்றைத் தடுத்து நிறுத்தி தமிழ்மக்கள் தங்கள் உரிமைகளைப் பெற்று சிங்கள மக்கள் போன்று தமிழ் மக்களும் தமது தாயகத்தில் சம உரிமையுடன் வாழ்வதற்கு சமஷ்டி ஆட்சி அமைப்பு ஒன்றே வழிசெய்யும் என்று குரல் கொடுத்தார் தந்தை செல்வா.

சமஷ்டி ஆட்சி அமைப்பில் தமிழ்மக்கள் சுயநிர்ணய உரிமையை வெல்ல மக்களின் ஆணையைக் கேட்டார். இதற்கு பெரும் பான்மை ஜனநாயகம் செவிமடுக்காததால் காந்திஜி வழியில் சாத்வீக போராட்டங்களைத் தலைமை தாங்கி நடத்தினார். காந்திஜி காட்டிய வழியைப் புரிந்து கொள்ளாத சிங்கள - பௌத்த மேலாண்மைவாதிகள் தந்தை செல்வாவையும் மற்றவர்களையும் பலதடவைகள் சிறை வைத்து சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை ஆயுதபலம் கொண்டு தாக்கி, சித்திரவதைசெய்து அடக்கியது.

சுமார் முப்பது ஆண்டுகாலம் இணைந்துவாழும் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து சாத்வீகப் போராட்டம் நடத்திய தந்தை செல்வா இழந்தது போதும் இனியும் இழக்கமுடியாது. இனி இழந்த தமிழீழ அரசை மீட்பதற்குப் போராடுவதைத்தவிர வேறு வழியில்லை என்று உணர்ந்தார்.

தமிழீழ அரசை மீட்டெடுக்கும் பொறுப்பை இளைஞர்களிடம் விட்டுச்சென்றுவிட்டார். ஆனாலும், அவரது ஆசி என்றும் இன்றைய போராட்டத்துக்கு இருந்தே வரும் என்று என் முன்னே உட்கார்ந்திருந்த நண்பர் பரமசிவம் சொன்னார்.

தந்தை செல்வா மற்றும் தலைவர்கள் நடத்திய போராட்டங்கள் வெற்றிபெறவில்லை என்று சொல்லி விட முடியாது. எந்தக்காலத்திலும் எமக்குள்ளேயே எட்டப்பர்கள், காக்கைவன்னியர்கள் இருந்தே கெடுத்து வந்திருக்கின்றனர். இன்றும் இவர்களால்தானே நாம் விடுதலையை முழுமையாக அடையமுடியாமலிருக்கிறது என்றேன்.

எதையும் ஒழுங்குமுறையாகச் செய்யவேண்டும். நேர்மையாகச் செய்யவேண்டும் என்பதில் குறிப்பாக இருப்பார் பெரியவர். நாங்கள் இளைஞர்களாக இருக்கையில் கட்சியின் வேலைகளில் ஈடுபட்டு அதன் வெற்றிக்காக உழைத்த சமயத்தில் இப்படி ஆலோசனைகள், புத்திமதிகள் சொல்பவர் தந்தை என்று நினைவுகூர்ந்தார். சமூகசேவகரும், கூட்டுறவாளரும், தமிழரசுத் தூண்களில் ஒருவருமான சிவமகாராஜா அவர்கள் என்று நினைவு கூர்ந்த பரமசிவம் இப்பொழுது தமிழீழப் போராட்டத்தில் பழைய தமிழரசர் பின்னிற்கவில்லை என்றார்.

அவர்கள் பின்னிற்க மாட்டார்கள். ஆனால், நாடாளு மன்ற பதவிக்காக முன்பு இடதுசாரி என்று சொல்லிப் பின்னர் தமிழரசில் சேரமுடியாதிருந்து தொடர்ந்து கூட்டணியில் ஒட்டி நாடாளுமன்றத்துக்கு இழந்த தமிழரசை மீளப் பெறுவதற்காக உறுதியெடுத்து தேர்தலில் வெற்றி பெற்றவர் மக்களால் நிராகரிக்கப்பட்டு விட்டார். அவர் இப்போது மீண்டும் சமஷ்டி என்றும் அம்மையாருக்கு ஆலவட்டம் பிடிக்கும்படியும் அறிக்கைவிட்டுக் கொண்டிருக்கிறார்.

உண்மையான தமிழ்க் கூட்டணிக்காரராக இருந்தால் தந்தை செல்வாவையும் அவரது கொள்கைகளையும் மறந்து விடுவாரா என்று மேலும் சென்னார் பரமசிவம்.

அவரைவிடும்! மக்கள் அவரை எப்போதோ மறந்து விட்டார்கள். அவர் தமது இருக்கையைக் காட்டிக்கொள்வதற்காகத் தானும் இருக்கிறன் என்று அறிக்கைவிட்டுக் காட்டிக்கொண்டிருக்கிறார்.

இப்படி சிலர் எந்தக் காலத்திலும் விடுதலைக்குப் போராடிய நாடுகளிலும் வாழ்ந்து தான் இருக்கிறார்கள் என்பதை வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றனவே என்றேன்.

மறைந்த கவிஞர் தில்லை சிவன் அமரராவதற்கு முன் தந்தை செல்வா காவியம் இயற்றினார். இதை வில்லுப் பாட்டாக யாராவது செய்தால் நல்லாயிருக்கும் என்று சிலர் சொன்னார்கள். கவிஞருக்கும் இப்படி ஒரு விருப்பம் இருந்தது.

யார் செய்யப் போகின்றார்கள்? அந்தக் காவியத்தின் இறுதிப் பந்தியில் தந்தை செல்வா வானில் இருந்து பார்க்கும் காட்சி இது என்றார் பரமசிவம்.

"இந்த அநீதியை எவர்எடுத் துரைப்பரோ!
எந்த நாடிந்தக் கொடைபற்றிக் கேட்குமோ!
இந்தியா வெமைக் கைவிடா தெனத்தமிழ்
இதயங்கள் வைத்த நம்பிக்கை போச்சுது
தந்தை யாயினும் தன்பசி தீர்க்கவே
தலைப்படுங்கலி காலத் தொழுங்கிலே
எந்த வாறிவர் பிளைப்பரோ எனவானத்
திருந்து செல்வா வருந்துமந் நிலையிலே

மாவீரர் துயிலுகின்ற இல்லங்களைக் கண்டார்
மனிதக்குண் டுகளாகித் தனைவந் தடைந்த
தீராதி தீரரைச் சேர்த்து அணைத்தார்
திருஷ்டி கழித்துத்தன் தோள்மீது சுமந்தார்
பாராதிக் கடல்மேலும் பாய்கின்ற வேங்கைப்
படைகண்டு உளம்விண்டு புளகுற்று எமக்கு
ஆரோ இணைஆவார் என்றுள்ளம் விண்டு
ஆனந்தக் கண்ணீர் பொழிந்து ஈழத்தை நனைத்தார்.

கல்வியியல்

பா.தனபாலன்

# ஆரம்பக் கல்விப் பாடசாலைகளின் வகை கூறல்களும், சவால்களும்

ஆரம்பத்துறையே இடைநிலை உயர்கல்விக்கும் ,உவப்பான வாழ்க்கைக்கும் மாணவர்களை உயர்த்தும் ஏணிப்படிகளாகும். இதைக் கருதியே இன்றைய கல்வி உலகமும், சமுதாயமும், அரசாங்கமும், அரசசார்பற்ற நிறுவனங்களும் இந்தத் துறையில் மிகக் கூடிய அக்கறை காட்டி வருகின்றன. ஆனாலும், எமது பிரதேசங்களில் இந்தத் துறை சார்ந்த கரிசனையோ, அக்கறையோ தேவையான அபிவிருத்தி நோக்கிய செயல் திட்டங்களோ போதுமானவையாக இல்லை. மேலும் ஆரம்ப கல்வித் துறையில் அபிவிருத்தி காணப்படாததால் தான், தற்போது சமூகத்தில் பல சீரழிவுகள் இடம்பெற்று வருவதாக சமூகவியல் அறிஞர்கள் தெரிவிக்கின்றார்கள். எனவே, ஆரம்பக் கல்வி அமுலாகும் பாடசாலைகள் சமூகத்துக்கும் பெருமளவு வகைகூறல்களை வழங்க வேண்டியுள்ளது.

இங்கு வகைகூறல் என்பது தமது கடமைகட்கு பொறுப்புக் கூறல் என்பதாகும். இதனைச் செவ்வனே செய்ய பல சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இன்றைய பெரும்பாலான சமூக உறுப்பினர்கள் தமது இருப்பு, அடையாளம், தேவை, கடமை என்பவற்றில் அக்கறை செலுத்தாமலும், ஆக்கபூர்வ சிந்தனை, படைப்பாற்றல், தொடர்பாடல், திறனின்மை, ஒத்துழைப்பு, சமத்துவம், சுயமுகாமைத்துவம் போன்ற விடயங்கள் தொடர்பான விழிப்புக்கள் அற்றுக் காணப்படுகின்றனர்.

மேலும் பலர் ஒரு நற்பிரசையின் அர்த்தம் விளங்காது, சமூகமயமாகாது சமூக சீர்கேடுகளையும் செய்து வருகின்றனர். எமது சமய விழுமியங்களும், பண்பாடுகளும் சிதைந்து வருகின்றன. இவற்றிற்கெல்லாம் அடிப்படையிலேயே தீர்வு காணும் விதை ஆரம்பப் பாடசாலையிலே உள்ளது.

ஆரம்பப் பாடசாலை அடிப் படையிலான புதிய வேலைத்திட்டங்கள்.

ஆரம்பக் கல்விப் பாடசாலை- சமூகத்தின் ஒரு மாதிரியாக, குறுக்கு வெட்டாக உள்ளது. மேலும் சமூகத்துடன் இன்றியமையாத உயிர்த் துடிப்பான தொடர்புகளையும், ஆரம்பப் பாடசாலை கொண்டிருக்க வேண்டும். ஆனாலும், எமது பிரதேசத்தில் ஆரம்ப பாடசாலைகளுக்கும், சமூக எதிர்பார்ப்புக்களுக்கும் இடையே பெரும்பாலும் முரண்பாடுகள் நிலவுகின்றன. பாடசாலைகள் பற்றிய விளக்கமின்மைகளும், நிதர்சனங்களும் பல்கிப் பெருகி உள்ளன. இதற்குப் பெற்றோர் - சமூகத்தவர்களுக்கிடையே ஆரம்பக் கல்விப் பாடசாலை, அதன் சீர்திருத்தச் செயலாற்றுகைகள் பற்றிய விளக்கமின்மைகள் நிலவுகின்றன.

ஆரம்ப ஆசிரியர்கள், அதிபர், நிர்வாகிகளிடையே சமுதாயம் தொடர்பான உணர்வுகளை மேலும் வலுப்படுத்த வேண்டியுள்ளது. இதற்குப் பாடசாலை அடிப்படையிலான புதிய சமூக மயமாக்கல், கல்விமயமாக்கல், வேலைத்திட்டங்கள், செயல் நிலை ஆய்வுகளை அமுலாக்க வேண்டியுள்ளது.

உதாரணமாக -

1. மாதாந்த பெற்றோர் கூட்டங்கள் பெற்றார், ஆசிரியர் தினம், பாடசாலை தினம், கல்விக் கண்காட்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள் மூலம் பெற்றோரையும் - சமூகத்தையும் பாடசாலைக்குள் வரவழைத்து, ஈடுபாடு கொள்ளவைத்தல்.

2. ஆரம்பக் கல்விச்சிறார்களைக் கொண்டு, அருகிலுள்ள வீதி, கோவில், பொது இடங்களைத் தொண்டு அடிப்படையில் அதிபர், ஆசிரியர்கள், சமுகத்தவர்களையும் இணைத்து சுத்தமாக்கல், சிறார்களுக்கான களப் பயிற்சிகளை, சுற்றாடல், சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்தல்.

3. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தை உயிர்த்துடிப்பாக செயலாற்ற வைத்தல். மாணவர்களின் ஆரம்பக் கல்வி தொடர்பாக சமுகம் நோக்கிய, வீடு நோக்கிய விழிப்புணர்வுச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பவற்றின் மூலம், பொது நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று, சமூக உறவுகளைக் கட்டியெழுப்பலாம்.

தற்பொழுது மேற்கண்டவாறான செயற்பாடுகள் நிகழ்ந்தாலும், அவை உயிர்த்துடிப்பானவையாக இல்லை. இந்த நிலையை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மாற்றுதல் வேண்டும்.

இன்றைய ஆரம்பப் பாடசாலைகள் கல்வி நிலையங்களாக மட்டும் கருதப்படுவதில்லை. அவை ஒரு சமூக ஒழுங்கமைப்பாகும். இங்கு வருபவர்களே எதிர்காலச் சந்ததிகளாக உள்ளனர். எனவே அயற்சமூகத்துடன் ஆரம்பப் பாடசாலை பல்வேறு தொடர்புகளை உயிரோட்டமாக வைத்திருத்தல் வேண்டும். பாடசாலை தொடர்பான நம்பிக்கையைச் சமூகம் பெறும் போது, சமூகத்திலிருந்து பல உதவிகள், வளங்கள் பாடசாலைக்குக் கிடைக்கும் .அதனூடு வினைத்திறனும், விளைதிறனும் கொண்ட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பாடசாலைகளில் நிலவி, சமநிலை ஆளுமையையும், ஆற்றலும், ஒழுக்கமும் கொண்ட இளம் சமுதாயத்தை அடிப்படையிலிருந்து உருவாக்கலாம். இதற்கு ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் பங்களிப்பும், அர்ப்பணிப்பும் அவசியமாகத் தேவைப்படுகிறது.


**புதிய ஆரம்பக் கல்வி ஆசிரியர் நடிபங்கு வகை கூறல்.**

மாற்றத்தின் முதன்மை முகவர் ஆசிரியர். மேலும் இன்று ஆரம்ப ஆசிரியர், வளர்ப்புப் பெற்றோராகவும் செயல்பட வேண்டும்.

வழிகாட்டியாக, உதவுபவராக, ஆலோசகராக, அன்பு செலுத்துபவராக மேற்கூறிய அனைத்து விடயங்களும் அடங்கும் நடி பண்புகளை ஆரம்ப ஆசிரியர் கொண்டிருக்க வேண்டும் . ஆனால் இவ்வாறான நடி பண்புகளுக்கான ஆற்றல்களைப் பெற, பல தடைகளும், சவால்களும் உள்ளன. இவை களைந்தெறியப்பட வேண்டும். இதற்கான வளங்களையும், வாய்ப்புக்களையும்கல்வி முகாமையாளர்களும், அரசாங்கங்களும் வழங்க வேண்டும். இவ்வாறு வழங்கும் போது, ஆசிரியர்களும் வகை கூறல்களுக்கு (Accountability) உட்படுவர்.

இங்குவகை கூறலானது ஆரம்ப ஆசிரியர் - தனக்குள்ள பொறுப்புக்களைச் சரிவர ஏற்று ,அதற்கான விளைவுகளை உணரும் தன்மையே வகை கூறலாகும். சமூக மாற்றம், சமூக நீதி, சமூக எதிர்பார்ப்புக்கள், விழுமியங்களுக்கு அமைதல், தன்னைத் தயார்ப் படுத்தல், கலாசாரப் பண்புகள், தர்க்க ரீதியாக செயற்படும், சிந்திக்கும் திறன், பொறுப்பேற்கும்தன்மை மாணவர்களை குறித்த தேர்ச்சி மட்டத்தில் அடைய வைக்கும் பொறுப்புணர்வைப் பெறல் என்பவை வகை கூறலின் அம்சங்களாக உள்ளன.


ஆசிரியர்கள் தம்பணி தொடர்பாக பலருக்கு வகை கூற வேண்டியுள்ளது. பல்வேறு துறையினர் வாயிலாக ஆசிரியரிடம் பொறுப்பானது (Responsibility) கையளிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் ஆசிரியர் வகை கூறல், அரசாங்க ஒப்பந்த ரீதியான வகை கூறல், தொழில் ரீதியான வகை கூறல், நிதி - சம்பள ரீதியான வகை கூறல், அரசியல் வகை கூறல், சமூக உறுப்பினர் ரீதியான வகை கூறல், கற்பித்தல் ரீதியான வகை கூறல்கள் என விரிந்து செல்கிறது.




பகுதி - 73

சங்கர்

# காற்றே நீ எது கதை கேளாயோ... அலையே நீ எது நிலை உணராயோ...



இவருடனான உரையாடல் பின்வருமாறு அமைந்திருந்தது.

பிள்ளை எத்தினையாம் ஆண்டு படிச்சவ?

'அப்ப மூண்டாம் ஆண்டு படிச்சுக் கொண்டிருந்தவ. இனிப்படிக்கிற தெண்டா நாலு படிக்கோணும்'

'நீங்கள் எண்ணெண்டு தப்பினீங்க?'

நான் தண்ணியில் அடிபட்டுப் போய் சமுர்த்தி உத்தியோகத்தரில பெரியவரின்ர கேற்றில அடிபட்டு, அதைப் புடிச்சுக் கொண்டு நிண்டன். அப்ப தண்ணி என்ரை நெஞ்சுக்கு மேலாகப் போய் கொண்டிருந்தது. அப்ப பக்கத்து வீட்டுக் காரர் ரெண்டு பேர் தண்ணீல உறுண்டு வந்தாங்கள். அவங்களைப் புடிச்சு ஒவ்வொரு கம்பிக் கட்டேல குடுத்தன். கொஞ்ச நேரத்தால தண்ணி வடிய, என்ரை புள்ளயத் தேடித் திரிஞ்சன்.

''புள்ள உங்களோட நிக்கேல்லையா?''

''பிள்ளை பக்கத்து வீட்டில பூ ஆயப்போனது. காலையில நானும், மூண்டு பிள்ளையளும் திருவெம்பாவைக்குக் கோயிலுக்குப் போயிருந்தம். அது முடிய நான் சாப்பிடப் போனன். பிள்ளையள் சாப்பிடல்ல. நாங்கள் பூ ஆய்ஞ்சிட்டு வாறமெண்டு மூத்தவவும், ரெண்டாவதும் போனவங்க. மூத்தவ பூ போதாது எண்டு இவவக் கூப்பிட்டவ. வீட்டை அம்மா புட்டு அவிச்சிட்டா சாப்பிடுவமெண்டு.

அப்ப, இவ எனக்குப் பசிக்கல்ல அக்காச்சி: தம்பியிருக்கிறான் நான் அவனோட விளையாடுறன். நீ ரோட்டில போய்ப் பூ ஆய் எண்டு சொல்லி, மூத்தவவை அங்கை அனுப்பிப் போட்டு, அவ அங்கை நிண்டவதான். பெரியபுள்ள பூ ஆயக்குள்ள கடல்ல தண்ணி வந்ததக்கண்டுட்டு, ஓடிவந்து கானுக்குள்ள நிண்டு தங்கச்சியாரைக் கூப்பிட்டிருக்குது. அவவுக்கு கடல் இரைச்சல்ல இவ கூப்பிட்டது கேக்கல்ல, அப்ப தாயிட்ட ஓடியந்து அம்மா கடல் பொங்கி வருகுது வாங்க வெளியில எண்டுது. தாய் நம்பேல்ல. தாய் கடல் எங்கை வாறதெண்டு ரோட்டில போய்ப் பார்த்தா தண்ணி வந்திட்டுது. அப்ப நான் காளையை அவுட்டுக்கொண்டிருந்தன் பின் வளவுக்க.

எனக்குப் பொங்கி வந்த மாதிரித் தெரியேல்ல. வானம் பதிஞ்சு வந்த மாதிரித்தான் நான் கண்டனான். பிறகுதான் கடல் முறிஞ்சுவாறதைக் கண்டு, பக்கத்து வீட்டுக்காரருக்கு சத்தம் போட்டனான்.

அங்க நிண்ட என்ரை பிள்ளை வேற வழியாலதான் வரலாம். அவங்களுக்கும், எங்களுக்கும் மூலைக் குள்ளாலை ஒரு வழி இருக்குது. நான் அங்கை ஓடினன் பிள்ளையைத் தேடி. அப்ப கடல் அடிச்சு பக்கத்து வீட்டுப்பிள்ளையையும், எங்கட பிள்ளையையும் கொண்டு போட்டுது.

''பக்கத்து வீட்டுப்பிள்ளைக்கு என்ன பேர்?''

"சுபாசினி'' அவவுக்கு வயசு 31 கலியாணம் கட்டி ஒருவருசம்

"பிள்ளை இருக்கோ''

"இல்லை''

''அப்ப உங்களுக்கு ஆரும், உதவினவையோ?

இல்ல. அண்டைக்கு நாங்கள் ஒரு மணிக்குத்தான் எங்கட பிள்ளைய எடுத்தனாங்கள். பிள்ளையைக் கொண்டுபோய் அடம்போடை மலையில வச்சிருந்தனாங்கள். இருட்டுக்குள்ளதான் இருக்க வேண்டியிருந்தது. ஒரு மெழுகுதிரிகூட கிடைக்கேல்ல. அதுக்குப் பிறகுதான் எட்டாம் கட்டையில இருக்கிற மாஸ்ரர் ஒருத்தரிட்ட மெழுகுதிரியெண்டாலும் தாங்க எண்டு கேட்டன். அவர் விளக்குக்கு எண்ணெய் விட்டுத்தந்தார்.

இரவு ஒரு மணியளவில மாவ னெல்லயில மாப்பைக்கற், சீனி, றஸ்க் எல்லாம் கொண்டுவந்து தந்தாங்கள் முஸ்லீம் ஆக்கள்.

அவங்கட சாரமும், சேட்டும்தான் இந்தச் சுனாமிக்குப் பிறகு நான் உடுத்தனான்.

இரவு ஒரு மணிக்குமேல அது வரைக்கும் பீத்தலோடையும், வெறும் மேலோடையும் இருந்தனான். தண்ணிகூட வடியாமல, புள்ளைக்குகூட உடுப்பு மாத்த வழியில்லாமல்தான் இருந்தனாங்கள்.

ஏனெண்டா எடுத்துக்கொண்டு போறதுக்கு ஒண்டுமே இருக்கயில்ல அந்த நேரம்.''

''நீங்கள் என்ன தொழில் செய்யிறனீங்கள்?''

''வெங்காயம்தான் செய்யிறனான்.''

"திருப்பி உங்கட நிலத்தில தொழில் செய்யக்கூடியதா இருக்குதோ?''

''குத்தகைக்குத்தான் செய்யிறனான். கும்புறுப்பிட்டியில இப்ப வாட்டபம் எல்லாம் கழட்டித் திருத்தக் குடுத்திருக்கிறன். என்ன மாதிரியெண்டு பாத்துத் தான் தொழில்வாய்ப்பைப் பற்றி யோசிக்கலாம்.''



"இப்பவேற உதவி கிடைக்குதோ?''

"முகாமில ஆண்டவனேயெண்டு நல்ல சாப்பாட்டுச் சாமான்கள் தாறாங்கள் தான். ஏன் வாங்கித் திண்டு போட்டு நாங்கள் பொய்யைச் சொல்லுவான்? எனக்கு மட்டுமல்ல எல்லாருக்கும் கிடைக்குது. இஞ்ச இருக்கிற தமிழ் ஆக்களில் 263 குடும்பத்துக்கும், முஸ்லீம் குடும்பம் 31 இக்கும் கிடைக்குது.

கொண்டு வந்தா சகல சாமானும் இல்லையெண்டாமல் கசலருக்கும் கிடைக்குது. ஒரு சிலரின்ரை பேருகள் லிஸ்ட்டுகளில மாறுபட்டுப் போறதில கிடைக்காமல் விட்டாலொழிய மற்றப்படி எல்லாருக்கும் ஒழுங்காகக் கிடைக்குது.

''உங்களுக்கு திரும்பக் குடியிருக்க எங்கை காணிதாற தெண்டு சொல்லியிருக்கினம்?''

''கும்புறுப்பிட்டியில தர்றதெண்டு சொல்றாங்கள். இதில இருநூறு மீற்றர் பிரச்சினையில எத்தினை குடும்பம் எழும்பவேணும் எண்டு சொல்றாங்களோ அத்தினை குடும்பங்களும் சேர்த்து தான் கதைக்கலாம்.''


"அதில்லை. பாதிக்கப்பட்ட ஆக்கள் - தாங்கள் எங்கை குடியிருக்க வேணுமெண்டு விரும்புகினமே அங்கை தான் மீள் குடியேற்றம் செய்யவேண்டும் என்று செல்லியிருக்கிற படியால் நீங்கள் எந்த இடத்தை தெரிவு செய்ய உத்தேசிக்கிறியள்?

(தொடரும்...)

# மாத்ரா பூகம்பத்தை அடுத்து ருச்செந்தூரில் கடல் வற்றியது!



மார்ச் 29
காலை 8.15 மணி



காலை 9.15 மணி

ருச்செந்தூரில் நேற்று முன்தி காலை கடல் இருமுறை உள் ாங்கியது.1 மணி நேரம் கரைவற் ய நிலையில் கடல் பாறைகள் தெரிந்ததை மக்கள் கூட்டம் கூட்ட ாக சென்று பார்வையிட்டனர்.

கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி னாமி பேரலைகளின்போது திருச் சந்தூர் கடல் மட்டும் உள்வாங்கி து. கரையில் இருந்து ஒரு கிலோ தூரம்வரை கடல் பின்நோக்கிச் றதால் கடலுக்குள் இருந்த கள் வெளியே தெரிந்தன. 10 ழத்துக்குரிய கடல் நீர் ஒரு நேரத்துக்கும் அதிகமாக உள் ாங்கியபடி நின்றது. பெரும் ஆச்சரி த்தையும் வியப்பையும் அளித்தது.


இதன் பின்னர் கடந்த 28 ஆம் கதி இரவு இந்தோனேஷியாவிற்கு அருகில் உள்ள சுமாத்ரா தீவில் ஏற் பட்ட பூகம்பம் வங்கக்கடலிலும் பாதிப் புகளை ஏற்படுத்தியது. திருச்செந்தூ ரில் நேற்றுமுன்தினம் காலையில் கடல் உள்வாங்கி செல்லுதல் நிகழ்ந் தது. காலை 6.15 மணிக்கு திருச்செந் தூர் சுப்பிரமணியசுவாமி கோவில் முன்னுள்ள கடற்கரையில் இருந்து திடீரென கடல் உள்வாங்கிச் சென் றது. 100முதல் 120மீற்றர் தூரம் வரை கடல் உள்நோக்கிச் சென்ற தால் கரைவற்றி பாறைகள் தெரிந் தன.

15 நிமிடங்களுக்குப் பின்னர் மீண் டும் கடல்நீர் கரைக்கு வந்து பழைய நிலையை அடைந்தது. இதைப் பார்த்ததும் கோயிலுக்கு வந்த பக் தர்களும் உள்ளூர் மக்களும் வியப் படைந்தனர்.

மீண்டும் காலை 8.15 மணிக்கு கடல் உள்வாங்கிச் சென்றது இம் முறை வள்ளி குகைப்குதியில் இருந்து தெற்கில் 1 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அமலி நகர் வரை இந்த கடல் உள்வாங்கல் நடந்தது. கரையில் இருந்து 120 மீற்றர் தூரம் வரை கடல் நீர் பின்நோக்கிச் சென்ற தால் கரை யோரக் கடலுக்குள் மூழ்கி இருந்த பாறைகள் வெளியே தெரிந் தன.

இதைக்கண்ட மக்கள் கடலுக்குள் இறங்கி பாறைகள் மீது நடந்து பார்த்த னர். இந்தக் கடல் உள்வாங்குதல் 9.05 மணி வரை நீடித்தது. ஏறத்தாழ ஒரு மணிநேரம் கடல் கரைவற்றி இருந்ததால் ஏராளமானோர் இத னைப் பார்த்தனர். 9.05 மணிக்கு பின்னர் கடல் மெல்லமெல்ல கரையை நோக்கி வந்து 9.15 மணிக்கு பழைய நிலையை அடை ந்தது.

# உடல்நலக்குறைவை அடுத்து பாப்பரசர் வைத்தியசாலையில்!



பாப்பரசர் ஜோன் போல் உணவு உட்கொள்ள முடியாமல் சோர்வ டைந்த நிலையில் உள்ளதனால் அவரை மீளவும் வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு வத்திக்கான் அதி காரிகள் தீர்மானித்துள்ளனர்.

பாப்பரசர் ஜோன் போல் கடந்த சில கால மாகவே பார்க்கின்சன் நோய் மூச்சுத்திணறல் உட்பட பல்வேறு நோய்களால் அவதிப்பட்டுவந்தார்.

84 வயதான பாப்பரசர் கடந்த மாதம் ரோம் நகரில் உள்ள ஜெர்மிலி வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டார். அங்கு அவருக்கு தொண் டையில் சத்திரசிகிச்சை நடந்தது.

அவரது தொண்டையிலிருந்து நுரையீரலுக்கு ஒரு குழாய் பொருத் தப்பட்டது. இதனால் அவருக்கு மூச் சுத்திணறல் நீங்கியது.

வைத்தியசாலையில் இருந்து அவர் வத்திக்கான் நகருக்குத் திரும்பி னார். ஆனாலும், சுகவீனம் முழுமை யாக குணமடையவில்லை ஈஸ்ரர் சிறப்பு பிரார்த்தனையிலும் அவர் கலந்துகொள்ளவில்லை. தொலைக் காட்சியில் பிரார்த்தனை நிகழ்ச்சி களைப் பார்த்தார்.

இந்த நிலையில் பாப்பரசரால் தற் போது உணவை விழுங்கமுடிய வில்லை. திரவ உணவை கூட அவரால் சரிவர சாப்பிடமுடியவில்லை . இத னால் அவர் மேலும் சோர்வடைந்த நிலையில் உள்ளார்.

இதனைத் தொடர்ந்து அவரை மீண்டும் வைத்தியசாலையில் அனு மதிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. அங்கு அவருக்கு தொண்டையில் மீண்டும் சத்திர சிகிச்சை நடைபெற உள்ளது. தொண்டையில் துளை போட்டு அதன் வழியாக வயிற்றுக் குள் ஒரு குழாயை சொருகவும் திட்ட மிடப்பட்டுள்ளது. பெர்க்குடேனியல் எண்டோஸ் கோப்பிக் காஸ்ட்ரோடமி என்று இந்த சிகிச்சைக் குப்பெயர். இதே முறையில்தான் அமெரிக்கா வின் மின்னி கோட்டா பகுதியில் மூளைசேதம் அடைந்து செயலற்று போன டெரிஷியாவோ என்ற பெண் ணுக்கு உணவுக்குழாய் பொருத்தப் பட்டு இருந்தது என்பது குறிப்பித்தக் கது.

உலக நோக்கு

# மூன்றாவது நிலநடுக்கம் பயங்கரமாகஇருக்குமாம்!

## நிபுணர்கள் மீண்டும் எச்சரிக்கை

இந்தோனேஷியாவில் கடந்த 28 ஆம் திகதி இரவு ஏற்பட்ட நிலநடுக்கம் உலகை மீண்டும் அதிர்ச்சிக்குள்ளாக் கியது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அள வில் 8.7 ஆக பதிவாகியிருந்தது.

டிசெம்பர் 26 ஆம் திகதி இதே பகுதியில் உருவான நிலநடுக்கம் ரிக் டர் அளவில் 9 ஆக இருந்தது. அப் போது சுனாமி பேரலைகள் உருவாகி பெரும் உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தியது.

முதலாவது நிலநடுக்கம் ஏற்பட்ட 3 மாதத்தில் 2 ஆவது நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. பொதுவாக நிலநடுக் கம் ஏற்பட்டால் தொடர் அதிர்வுகள் ஏற்பட்டு அடங்கி விடும். ஆனால், இந் தோனேஷியாவில் டிசெம்பர் 26 ஆம் திகதிக்குப் பின்னர் தொடர் அதிர்வுகள் தினமும் ஓயாமல் இருந்தது. அந்த மான் நிக்கோபார் தீவுகளையும் இந் தோனேஷியாவையும் தொடர் நிலநடுக் கம் தாக்கியது. அதன்பின்னர் 28 ஆம் திகதி 2 ஆவது பெரிய் பூகம்பம்இந் தோனேஷியாவை தாக்கியுள்ளது.

இதனால் இதேபகுதியில் மூன்றா வது பூகம்பம் தாக்கக்கூடிய அபாயம் இருப்பதாக இங்கிலாந்து புவியியல் நிபுணர் ஜோன் மெக்கிலாஸ்கி எச் சரிக்கை விடுத்துள்ளார்.

மூன்றாவது பூகம்பம் மிகப்பயங் கரமாக இருக்கும். அதுவும் மிக விரை வில் நிகழக்கூடும் என்றும் அவர் எச் சரித்துள்ளார். இவர் தற்போது இந் தோனேஷியாவில் சுமாத்ரா தீவுப்பகுதி யில் ஏற்படும் நில நடுக்கங்கள் குறித்து ஆய்வு நடத்தி வருகிறார்.

கடந்த 28 ஆம் திகதி ஏற்பட்ட பூகம் பத்தால் சுனாமி பேரலைகள் தாக்கக் கூடிய அபாயம் இருந்தது. ஆனால் பூமியின் சுழற்சிப்பாதை கீழ்நோக்கி நகர்ந்துவிட்டதால் சுனாமி பேரலைகள் ஏற்படவில்லை என்று மற்றொரு இங் கிலாந்து நிபுணர் டேவிட் பூத் தெரிவித் துள்ளார்.

மூன்றாவது பூகம்பத் தாக்குதல் கூடிய விரைவில் இருக்கும் என்றும் அது 3 மாதங்களுக்குள் நிகழக்கூடும் என்றும் நிபுணர்கள் எச்சரித்துள்ள நிலையில் இதன்போது சுனாமி அலைகள் உருவாகுமா என்பது குறித்து நிபுணர்கள் தொடர் ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

# சுமாத்ரா தீவில் நேற்றும் நிலநடுக்கம்!

இந்தோனேஷியாவுக்கு அருகி ள சுமாத்ரா தீவில் கடந்த திங்கட் மை இரவு - ரிக்டர் அளவில் 8.7 பதிவான நிலநடுக்கம் 3 நிமிடங் நீடித்ததில் இந்தோனேஷியாவில் ம் பாதிப்பு ஏற்பட்டதுடன். அருகி ள தீவுகளிலும் பாதிப்புக்கள் ஏற் டன. இந்தோனேஷியாவின் மேற் க் கடலோரப் பகுதியிலுள்ள குணாங்சி கரில் 70 வீதமான வீடுகள் ந்து தரைமட்டமாகின. நியாஸ் வில் சுமார் 2 ஆயிரம் பேர் உயிரி ந்தனர்.

இந்த நிலநடுக்கத்தைத் தொடர் து நேற்றுமுன்தினம்வரை 14 றை அடுத்தடுத்து நிலநடுக்கம் ற்பட்டது. இதன்காரணமாக நிலந கத்தின் தாக்கம் காணப்பட்ட குதியிலுள்ள மக்கள் பெரும் பீதியு டன் காணப்பட்டனர். வீடு மற்றும் அலுவலகங்களுக்குச் செல்லாமல் வீதிகளிலும் வெளிகளிலும் தங்கியி ருந்தனர்.

இந்நிலையில் நேற்று அதிகாலை 2.12 மணிக்கு சுமாத்ரா தீவில் மீண் டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. சுமாத்ரா தீவின் மேற்குக் கரையோரப் பகுதியில் 2.5 டிகிரி வடக்கு மற்றும் 98.5 டிகிரி கிழக்கில் இந்த நிலநடுக் கம் மையம் கொண்டிருந்தது.

நேற்று ஏற்பட்ட நிலநடுக்கம் 5.1 ரிக்டர் அளவில் பதிவாகியிருந்தது. கடந்த திங்கள் ஏற்பட்ட மிகப்பெரிய பூகம்பத்தின் பின் விளைவாக இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

மீண்டும் மீண்டும் ஏற்படும்நில நடுக்கம் காரணமாக சுமாத்ரா தீவு க்கு அருகிலுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் பெரும் பீதியுடன் உள்ளனர்.

# மிராஜ்-2000 விமானங்களை இந்தியா வாங்கவுள்ளது!

பிரான்ஸ் தயாரிப்பான மிராஜ் 2000 ரக விமானங்கள் 12 ஐ வாங்கு வதற்கு இந்திய மத்திய அமைச்சரவை அனுமதியளித்ததை அடுத்து அவற் றைக் கொள்முதல் செய்வதற்கு இந் திய பாதுகாப்பு அமைச்சு தீர்மானித் துள்ளது.

இவ்வாறு கொள்வனவு செய்ய ள 12 மிராஜ் 2000 ரக விமானங் ன் மொத்தப் பெறுமதி 700 மில் ன் அமெரிக்க டொலரெனத் தெரி கப்படுகிறது.

இந்த விமானங்களின் விலை தொடர்பாக பேச்சுவார்த்தை நடை றவுள்ளதாக இந்திய பாதுகாப்பு மைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித் ர். அத்துடன் படையினருக்குத் வையான மற்றைய உபகரணங் களை கொள்வனவு செய்வதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கி யுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



அத்துடன் இந்திய - நேபாளிய, இந்திய - பூட்டான்எல்லைப்பகுதிகளின் பாதுகாப்பை கண்காணிக்கும் வகை யில் மேலதிகமாக 20 இராணுவ பட் டாலியன்களை உருவாக்கவும் அமைச் சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# சைவபரிபாலனசபை நடத்திய சைவநெறிப் போட்டி முடிவுகள்!

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடத்திய சைவநெறித் தேர்வுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள் ளன.

முதல் மூன்று இடத்தை பெறும் மாணவர்கள் முறையே தங்கப்பதக் கம், வெள்ளிப்பதக்கம், வெண்கலப் பதக்கம் ஆகியன வழங்கப்படவுள் ளது.

முதல் மூன்று இடத்தைப்பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு -

தரம் 2 - 1ஆம்பரிசு - பரமானந் தம் லோகாசனன் ( மானிப்பாய் சக்திசாயி வித்தியாலயம்), 2ஆம் பரிசு - அபிராமி ரவிதரன் (யாழ். இந்துஆரம்பப்பாடசாலை), 3ஆம் பரிசு - புவித்தா சூரியமூர்த்தி (தும்பசிட்டி மெ.மி.த.க.பாட சாலை).

தரம்3 - 1ஆம்பரிசு -இராஜசேகர் மதூஷன்(பருத்தித்துறை சித்தி விநா யகர் வித்தியாலயம்), 2 ஆம்பரிசு- இராசேந்திரன் கோகிலன் (மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியால யம்), 3ஆம் பரிசு - கேசவக்குருக்கள் சுதர்சன் (சைவப்பிரகாசமகளிர் கல் லூரி),

தரம் 4 - 1 ஆம்பரிசு - சகிஷ் மனா சிவசந்திரபோஸ் (வதிரி திரு இருதயக்கல்லூரி), 2 ஆம் பரிசு - கிரு ஷிகா கமலநாதன்(வயாவிளான் மத் திய.ம.வி), 3 ஆம் பரிசு - கிருசணா சிவ சுப்பிரமணியம் (சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம்).

தரம் 5 - 1 ஆம் பரிசு - சிவகுமார் மேகலாதன் (புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்) 2 ஆம் பரிசு-வர் ணிகா கலைச்செல்வன் (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), 3 ஆம் பரிசு - ஷாம்பவி நாகதேவன் (வரணிமகா வித்தியாலயம்).

தரம் 6 - 1 ஆம் பரிசு-இரத்தின வேல் ஸ்ரீதுவாரகன் (யாழ்.இந்துக்கல் லூரி), 2 ஆம் பரிசு - ஜெனனி ஜெக தீசன் (வேம்படி மகளிர் உயர்தரப்பாட சாலை), 3 ஆம் பரிசு - விஷ்ணுஜா விமலநாதன்(கொக்குவில் இந்துக் கல்லூரி).

தரம் 7 - 1 ஆம் பரிசு - சோபினி நித்தியானந்தன் (மெதடிஸ்த பெண் கள் உயர்தரப்பாடசாலை), 2 ஆம் பரிசு-வரதராஜா ஜெனன் (டிறிபேக் கல்லூரி), 3 ஆம் பரிசு - புஸ்பமீரா சிவபாதம் (புற்றளை மகாவித்தியால யம்).

தரம் 8 - 1 ஆம் பரிசு - தர்சிகா செல்வராஜா (யாழ்ப்பாணக் கல்லூரி), 2 ஆம் பரிசு - அன்னலிங்கம் சசிந் தன் (சேர்வைத்திலிங்கம் துரைசாமி ம.ம.வி), 3 ஆம் பரிசு - மணிநீரஜா மகேந்திரராஜா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

தரம் 9 - 1 ஆம் பரிசு - நிசாந்தினி சிவச்செல்வம்(வடமராட்சி இந்து மக ளிர் கல்லூரி), 2 ஆம் பரிசு - மது வந்தி பஞ்சாட்சரம் (சாவகச்சேரி இந் துக் கல்லூரி), 3ஆம்பரிசு-விவேகா நந்தன் சுயந்தன்(சென்ஜேன்ஸ் கல் லூரி).

தரம் 10 - 1 ஆம் பரிசு - சர்மிகா அருணந்திசிவம் (இராமநாதன் கல் லூரி), 2ஆம்பரிசு - குலசேகரம் ஹசன் (ஹாட்லிக் கல்லூரி), 3ஆம் பரிசு - தயாளினி செல்வரத்தி னம் (மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை).

தரம் 11 1 ஆம்பரிசு - தர்மினி பாலசிங்கம் (புனிததெரேசாள் மகளிர் கல்லூரி), 2ஆம்பரிசு-துவாரகா சிவ லிங்கம்(கிளி.இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), 3ஆம்பரிசு-அனு சியா ஆனந்தசிவம் (மகாஜனாக் கல் லூரி).

இந்துநாகரிகம்

தரம் 12 - 1 ஆம் பரிசு - கயல்விழி சிவலிங்கம்(பண்ணாகம் மெய் கண்டான் ம.வி), 2 ஆம் பரிசு- லக்ஷ்னா சத்தியமூர்த்தி (மாங்குளம் மகா வித்தியாலயம்) 3 ஆம் பரிசு-சிந் துஜா இரத்தினசிங்கம் (இணுவில் இந் துக்கல்லூரி).

இந்துசமயம்

1 ஆம் பரிசு - குணசேகரம் விக் னேஸ்வரன் (புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம்), 2ஆம் பரிசு - ரசிதா யோகேஸ்வர ஆனந்தராசா (கோண் டாவில் இந்துமகாவித்தியாலயம்), 3ஆம்பரிசு - சாமளை தவராஜா (சுண் டுக்குளி மகளிர் கல்லூரி).

இந்துநாகரிகம்

தரம் 13 - 1 ஆம் பரிசு - ஜெனிதா யோகநாதன்(கொடிகாமம் திருநாவுக் கரசு ம.வி), 2 ஆம் பரிசு - பாலசாந்தி குணசேகரம் (உடுப்பிட்டி மகளிர் கல் லூரி),3 ஆம் பரிசு - சர்மினி கணேச மூர்த்தி (அருணோதயக் கல்லூரி).

இந்துசமயம்

1 ஆம் பரிசு-சசிகலா சந்திரன் (கிளி நொச்சி மகாவித்தியாலயம்), 2ஆம் பரிசு-குகப்பிரியா பரராசசிங்கம் (நயி னாதீவு மகாவித்தியாலயம்), 3 ஆம் பரிசு - சர்மிலா ஜெயஷானி உபசேன (சிலா.சென்.பெர்ணடேற் தமிழ் ம.வி).

நமது ஈழநாடு
The. Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# திருக்கோவில் பகுதியில் நேற்று இரண்டாவது நாளாக ஹர்த்தால்

அம்பாறை மாவட்டத்தில் ஹர்த்தாலில் ஈடுபட்ட மக்கள் மீது விசேட அதிரடிப்படையினர் நடத்திய தாக்குதல்களைக் கண்டித்து நேற்றும் ஆலடி வேம்பு, திருக்கோயில், பாண்டிருப்பு, துறைநீலாவணை ஆகிய பிரதேசங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் உள்ளிட்ட போராளிகளை விசேட அதிரடிப்படையினர் தாக்கிய சம்பவத்தை கண்டித்து நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டத்தின் தமிழ்ப் பிரதேசங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது ஹர்த்தாலில் ஈடுபட்ட பொதுமக்கள் விசேட அதிரடிப் படையினரால் தாக்கப்பட்டனர்.

ஹர்த்தாலில் ஈடுபட்ட மக்கள் மீது விசேட அதிரடிப் படையினர் நடத்திய தாக்குதலைக் கண்டித்து நேற்று அம்பாறை மாவட்டத்தின் ஆலடி வேம்பு, திருக்கோவில், பாண்டிருப்பு, துறைநீலாவணை ஆகிய பிரதேச மக் கள் இரண்டாவது நாளாக ஹர்த்தாலில் ஈடுபட்டனர்.

ஹர்த்தாலின்போது இந்தப் பகுதிகளிலுள்ள அரச நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. வர்த்தக நிலையங்கள் பொதுச் சந்தைகளும் இயங்கவில்லை. தனியார் கல்வி நிறுவனங்களும் பாடசாலைகளும் மூடப்பட்டிருந்தன.

நேற்றைய ஹர்த்தாலின்போது வீதிகளில் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன. (07)

## விண்ணப்பம் கோரல்

அடுத்த ஆண்டு நடைபெறும் கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் தகவல் தொழில்நுட்ப பாடத்திற்கு தோற்ற விரும்புகின்ற மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் அதிபர்களினூடாக எதிர்வரும் 4-ஆம் திகதிக்கு முன்னதாக பரீட்சைத் திணைக்களத்திற்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## சுனாமி எச்சரிக்கையால்...

முகத்துவாரம், ஆகிய இடங்களைச் சேர்ந்த 10 பேரே உயிரிழந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எச்சரிக்கை விடுக்கப்பட்டதையடுத்து அதிர்ச்சியில் மயக்கமடைந்த மொறட்டுவ கொரலவெல்லவைச் சேர்ந்த தெல்கே ஹெரியட் பீரிஸ் (வயது72) என்ற பெண்மணி வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்கையில் மரணமானார்.

பாணந்துறை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த கே. மில்டன் பீரிஸ் என்பவர் சுனாமி வரப் போவதாக தகவல் அறிந்தவுடன் மருத்துவமனையில் இருந்து தப்பிச் செல்லும்போது பாதையில் மயங்கி வீழ்ந்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

களுத்துறை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வீடு திரும்பியிருந்த சிறிசேன பீரிஸ் என்பவர் தகவல் அறிந்தவுடன் அச்சமடைந்து தனது வீட்டுத் தோட்டத்திலுள்ள மரத்தில் தூக்குப்போட்டு இறந்தார்.

அட்டாளைச்சேனை 7 ஆம் குறிச்சியைச் சேர்ந்த வெள்ளைத்தம்பி (வயது73) மற்றும் 13 ஆம் குறிச்சியைச் சேர்ந்த ஷக்கினா உம்மா (வயது-60) ஆகியோர் மாரடைப்பால் மரணமடைந்தனர்.

பெரிய நீலாவணையைச் சேர்ந்த வைரவன் தங்கபிள்ளை எனும் 55 வயது பெண்மணி பாதுகாப்பான இடம்தேடி ஓடுகையில் கீழே விழுந்ததில் கல்லில் தலை மோதுண்டு மரணமானார். கொஸ்கொடையைச் சேர்ந்த வில்வன் மெண்டிஸ்(வயது77) மற்றும் முகத்துவாரத்தைச் சேர்ந்த கேத்தன் பெரேரா ஆகியோர் ஓடும்போது கீழே விழுந்ததில் உயிரிழந்தனர்.

ஹெந்தலையைச் சேர்ந்த ஏ. ஜெனட் எனப்படும் 55 வயது பெண் தொலைக்காட்சியில் செய்திகளைப் பார்த்துக்கொண்டிருந்தபோது மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைந்தார்.

சம்மாந்துறை மாவடிப்பள்ளியைச் சேர்ந்த மொஹிதீன் பிச்சை ரிபாய் எனும் 18 வயது பாடசாலை மாணவன் ஓடும்போது லொறியில் மோதி உயிரிழந்தான்.

சுனாமி ஏற்பட்டு அதனால் உயிரிழப்பு எற்படுவதைத் தவிர்ப்பதற்காக முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் அந்த முன்னெச்சரிக்கையே 10 பேரின் உயிரையும் பறித்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

## பொம்மை ஆட்சியை...

பதவியிலிருந்து விலகிப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்னசிறி விக்கிரமநாயக்கவை நாடாளுமன்றின் வாக்கெடுப்புடன் ஜனாதிபதியாக்குவதற்கும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அவரை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்து வெற்றிபெற்ற பின்னர் அவரது அதிகாரத்தின் மூலம் தான் பிரதமராகுவதற்கும் திட்டமிட்டிருந்தார்.

இதன்பின்னர் ரட்னசிறி விக்கிரமநாயக்கவை பொம்மையாக வைத்து தான் ஆட்சியைத் தொடர்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா வியூகங்களை வகுத்திருந்தார்.

ஆனால், இவரது இந்தத் திட்டத்துக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கடும் எதிர்ப்புத் தெரிவித்ததுடன் ஜனாதிபதி பதவியை எவருக்கும் ஜனாதிபதி வழங்கலாம். ஆனால், பிரதமர் பதவி மீது கை வைப்பீர்களாக இருந்தால் அதனை நான் கடுமையாக எதிர்ப்பேன் எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து, ஜனாதிபதி சந்திரிகா தனது திட்டத்தைக் கைவிட்டு கருத்துக்கணிப்பு நடத்துவதில் தற்போது முனைப்பாக உள்ளார். ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையை அவருக்கு மிகவும் நெருங்கிய வட்டாரங்கள் உறுதிப்படுத்தவோ, மறுக்கவோ இல்லை.

சுனாமி அனுதாப அலையைப் பயன்படுத்தி, ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை சுலபமாக ஜனாதிபதியாக்கிவிடலாம் என்று ஜனாதிபதி சந்திரிகா கருதியிருந்தார் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## படையினர் கைது...

யோர் குறிப்பிடப்பட்டிருந்தனர். முதலாம் பிரதிவாதியான லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார். இவர் மேற் படி சாட்சியத்தை ஏற்றுக் கொண்டார்.

நாகமுத்து செல்வரட்ணம் என்பவர் தொடர்பான வழக்கும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார் என செல்வரட்ணம் இராசம்மா சாட்சியமளித்தார். இந்த சாட்சியத்தையும் லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டார்.

இருப்பினும் இவரது சட்டத்தரணி குறுக்கு விசாரணை செய்வதற்கு அவகாசம் கேட்டதற்கு அமைய மேற்படி வழக்குகள் மே மாதம் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

ஏனைய காணாமற்போனோர் தொடர்பான வழக்குகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளதால் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டு லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். லோகேஸ்வரன் சேரன், நாகமுத்து செல்வரட்ணம் ஆகிய இருவரும் அரச உத்தியோகத்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# தற்காலிக முகாம்களில் தொற்றுநோய் அபாயம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு தொற்றுநோய் பரவுவதற்கான வாய்ப்புள்ளதாக மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

கிண்ணியாவில் கடந்த மூன்று மாதங்களாக தற்காலிக முகாம் களில் தங்கியுள்ளவர்களுக்கு வயிற்றோட்டம், அம்மை, தொண்டை வலி மற்றும் காய்ச்சல் போன்ற நோய்கள் தொற்றியுள்ளதாக இந்தப் பகுதிக்கான பிரதேச சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

ஒரு கூடாரத்தில் பல சந்தர்ப்பத்தில் பல குடும்பங்கள் ஒன்றாகத் தங்க வேண்டியுள்ளதாகவும் தமக்கு உலோகக் கூரைகளுக்குப் பதிலாக ஓலைக் கூரைகளை வழங்கு மாறும் அங்கு தங்கியுள்ள மக்கள் கோரியுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் தங்கியுள்ளவர்களுக்கு குடிநீருக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக 1290 தற்காலிக குடியிருப்புக் அமைத்துத் தருவதாக அரசம[...] வனங்கள் உறுதியளித்த போ[...] இன்னும் வேலைகள் முடி[...] வில்லையென்றும், இதனால் [...] நோய்கள் பரவும் வாய்ப்பு[...] கரித்துள்ளதாகவும் தெரிவி[...] கிறது.

## ஈ.பி.டி.பி...

தாக்குதலை மேற்கொண்ட நபர்கள் பதுங்கியிருந்து முதலில் கைக்குண்டை வீசியபின்பு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்திலேயே குறிப்பிட்ட பொலிஸ் சார்ஜன்ட் பியஸ் பெரேரா (வயது 47) காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பிரதேசத்தில் தேடுதல் மேற்கொண்ட பொலிஸாராலும் இராணுவத்தினராலும் கைவிடப்பட்ட நிலையில் ரி.56 ரக துப்பாக்கியொன்று மகசீனுடன் கைப்பற்றப்பட்டது.

## அரசின்..

போதுள்ளனர். கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை போன்ற பிரதேசங்களில் இராணுவத்தினரின் உதவியுடன் அவர்களுடன் சேர்ந்தியங்கும் கூலிப்படைகளால் அரசியல் படுகொலைகள் தொடர்கின்றன.

அண்மையில் ஏற்பட்ட சுனாமி - மக்களின் வாழ்க்கையை மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளது. சுனாமி துயரங்கள் ஓர் மனித உரிமை மீறல் சம்பவம் இல்லாவிடினும், வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு எந்தவித மனிதாபிமான உதவியையும் செய்யாத காரணத்தால் இது ஒரு மனித உரிமை மீறலாக மாறியுள்ளது.

தொடர்ந்து சர்வதேச சமூகத்தால் வழங்கப் பட்டுவரும் எந்தவித நிவாரணங்களோ, நிதி உதவிகளோ வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்றுவரை கிடைக்கவில்லை.

சுனாமியின் பாதிப்புக்களை நேரில் பார்வை யிட ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது, அவரை வடக்கு - கிழக்குக்குச் செல்லவிடாது அரசு தடுத்துநிறுத்தியது.

அரசின் இந்தச் செயற்பாடு - ஐ.நா. சபையின் அதிகாரப் பத்திரத்தின் சாரம் 100 ஐ மீறும் செயலாகும். இது மிகவும் கண்டனத்துக்குரிய விடயம்.

கொபி அனானை தொடர்ந்து வந்த பல நாட் டுத் தலைவர்களையும் வடக்கு - கிழக்குக்கு விஜயம் செய்ய விடாது அரசு தடுத்து நிறுத்தியுள்ளது. இது மனிதாபிமான [...]ற செயலாகும்.

இதேவேளை - பெரும் தொகைப் பணத்தைச் செலவழித்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்து, அரசாங்கம் போருக்குத் தன்னைத் தயார் செய்கிறது.

இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்கள் மீதான அனுதாபம் சர்வதேச சமூகத்துக்கு இருந்தபோதிலும், அதை வெளிப்படையாகக் காட்டத் தயங்குவது மிகவும் கவலை தரும் விடயம். இதனாலேயே அரசாங்கத்தால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் துன்புறுத்தப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தக் கூட்டத் தொடரால், இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்கள் - ஏனைய மக்களைப் போல் நடத்தப்படவேண்டும் என்று ஓர் கண்டனம் கொண்டுவருமாறு உங்களைக் கேட்டுக்கொள்ளும் அதே வேளை - சர்வதேச சமூகத்திடம் நிவாரண உதவிகளை வடக்கு-கிழக்கு மக்களுக்கு நேரடியாக அனுப்பி வைக்க வேண்டிக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் - அறிக்கைகளும், அட்டவணைகளும், ஒப்பீடுகளும் உங்கள் கவனத்துக்கு இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சத்திரசிகிச்சை...

நிரந்தர நியமனம் பெறுவதற்கான ஏற்பாடு செய்வதாகவும், அல்லது அவர் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு வரவிரும்பும் சந்தர்ப்பத்தில் அவருக்கான பொறுப்பை தாம் ஒப்படைப்பதாகவும் பேரவையால் தெரிவு செய்யப்பட்ட குழு உறுதியளித்தது.

இதனை அடுத்து சத்திரசிகிச்சை வகுப்புக்களை மீள ஆரம்பி[...] சிகிச்சை நிபுணர் குழு சம்ம[...] வித்தது.

எனவே, மருத்துவபீட [...]ணவ[...]கள் அனைவரையும் இன்று வி[...]வுரைகளுக்குத் திரும்புமாறு யாழ். ப[...]கலைக்கழக மருத்துவபீட மாண[...] ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா விஜயரட்ணம்

(மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதகர் (M.L.T.)
மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட[...] கொண்ட திரு.கந்தையா விஜயரட்ணம் 30.03.2005 அன்று கால[...]னார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா – மூத்ததங்கத்தின் இ[...] மகனும், காலஞ்சென்ற சொக்கலிங்கம் காமாட்சிபிள்ளையின் [...] மகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், தயாவதி குறி[...] குமரன், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தகப்பனா[...] ஸ்ரீஸ்கந்தராஜாவின் அன்பு மாமனாரும், திருமதி செல்லம்ம[...] இராஜரட்ணம், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் திரும[...] சரஸ்வதி சண்முகநாதன், திருமதி பரமேஸ்வரி கனகசபை, காலஞ்[...]சென்ற திருஞானசம்பந்தர், மகேஸ்வரி, மயில்வாகனம் மற்றும் விநாயக[...]மூர்த்தி, திருமதி அன்னலட்சுமி தருமலிங்கம், திருமதி மனோன்மணி [...] விமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் திருமதி ஞானசவுந்தரி பாலசுப்பிரணியம், கனகசபை[...] மயில்வாகனம், சர்வேஸ்வரி, தர்மலிங்கம், காலஞ்சென்ற விமலநா[...] மற்றும் சண்முகலிங்கம் (சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு [...]னருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (31.0[...] 2005) பிற்பகல் 3 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்[...] பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரு[...] ஏற்றுக்கொள்ளவும்.

அருளானை,
பன்னாலை,
தெல்லிப்பளை.

(1109)

தகவல்:-
நகுலேஸ்வரி
(மனைவி)

## விக்கினேஸ்வரன் சிறிகுமார்

(கல்லுடைக்கும் ஆலை உரிமையாளர்)



கோண்டாவில் கிழக்கு கொட்டை[...]காடு வீதியைப் பிறப்பிடமாகவும், வசி[...]பிடமாகவும் கொண்ட விக்கி[...]வரன் சிறிகுமார் 28.03.2005 [...]கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலு[...] பிள்ளை விக்கினேஸ்வரன் ம[...]றும் யோகராணி தம்பதியினரின் [...]த்த புதல்வனும், தயாலக்சுமியின் அன்புக் கணவரும், தயாவரன், சிறிகரன், குகபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகுமார், மோகனதாஸ் (லண்டன்), காலஞ்சென்ற சிவானந்தராசா மற்றும் கமலினி (நோர்வே[...] செல்வமலர், பவானி ஆகியோரின் அன்புச் சகோதரனு[...] சாந்தகுமார் (நோர்வே), சசிரூபன் (யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூட உதவியாளர்), ஜீவானந்தன் (லண்டன்), தாரணி, தயாளினி, தயாவதி, தயாரூபி, தயானந்தன் (சுவிஸ்), காலஞ்சென்ற தயாபரன் மற்றும் தயாசெல்வி, தயாஜோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு கோண்டா[...]வில் கிழக்கு கட்டை ஆலடி மயானத்தில் தகனம் செய்ய[...]படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்க[...] அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

கொட்டைக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(1107)

தகவல்:-
குடும்பத்தின

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 31.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்